



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 201 04.03.2026 புதன்கிழமை

Chennai Volume: 01 Issue: 201 Wednesday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

புதன்கிழமை
(4–03–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–20
பிறை: தேய்பிறை
திதி
பிரதமை மாலை 5.43 வரை
பிறகு துவிதியை
நட்சத்திரம்:
பூரம் காலை 8.23 வரை
பிறகு உத்திரம்.
யோகம்
அமிர்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 12.00–1.30 மணி
எமகண்டம்
காலை 7.30–9.00 மணி
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 4–5 மணி

மேஷம் ................ ஆக்கம்
ரிஷபம் ..................... திடம்
மிதுனம் .................. ஓய்வு
கடகம் ................ மகிழ்ச்சி
சிம்மம் ..................... புகழ்
கன்னி .................. ஊக்கம்
துலாம் ..................... தனம்
விருச்சிகம் ............... நலம்
தனுசு ..................... வெற்றி
மகரம் .................... போட்டி
கும்பம் .................. தெளிவு
மீனம் ...................... லாபம்

# போர் நிறுத்தம் குறித்து இஸ்ரேலுடன் பிரதமர் மோடி பேச்சு

## 90 லட்சம் இந்தியர்களை பாதுகாக்க நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சரவைக் குழு அவசர ஆலோசனை

**புதுடெல்லி, மார்ச்.4:**

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் தீவிரமாக நடந்து வருவதால், மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. அந்த நாடுகளில் வசிக்கும் 90 லட்சம் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு அவசர ஆலோசனை நடத்தியது.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய மோடி, விரைவில் போர் நிறுத்தம் செய்து, அமைதியை ஏற்படுத்துமாறு வலியுறுத்தினார்.

அணு ஆயுத தயாரிப்பை நிறுத்த வேண்டும் என்பதை ஏற்க மறுத்த ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவம் இணைந்து போர் தொடுத்தன. இந்த தாக்குதலில் ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல், அமெரிக்க ராணுவ முகாம்கள் உள்ள அண்டை நாடுகளான கத்தார், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா ஆகிய நாடுகள் மீது ஏவுகணைகள், ட்ரோன்களை வீசி ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

*350 விமான சேவைகள் ரத்து:* இதனால், மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள 11 நாடுகளில் வான்எல்லைகள் மூடப்பட்டுள்ளன. இந்திய விமான நிறுவனங்கள் 350 சர்வதேச விமான சேவைகளை ரத்து செய்துள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் 90 லட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். இவர்களது பாதுகாப்பு குறித்து பிரதமர் மோடி தலைமையில் பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு நேற்று முன்தினம் இரவு அவசர ஆலோசனை நடத்தியது.

*24 மணிநேர உதவி மையங்கள்:* வெளிநாட்டு விமான நிலையங்களில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பது, அவசரநிலை ஏற்பட்டால் மீட்பதற்கான ஏற்பாடுகளை செய்வது ஆகியவை குறித்து இதில் முக்கிய ஆலோசனை நடத்தப்பட்டது. ஈரான் தலைநகர் டெஹ்ரான், இஸ்ரேலின் டெல் அவிவ், அபுதாபி, துபாய் ஆகிய இடங்களில் 24 மணி நேர உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இந்தியர்களுக்கு தேவையான உதவிகளை தூதரக அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் படிக்கும் இந்திய மாணவர்களின் பாதுகாப்பு குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. கடல்சார் வர்த்தக வழித்தடத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, வர்த்தக நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

*தலைவர்களிடம் கோரிக்கை:* இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் தொலைபேசியில் பேசிய பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து கவலை தெரிவித்தார். இந்தியர்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிப்பது குறித்து



வலியுறுத்திய மோடி, போர் நிறுத்தம் செய்து விரைவில் அமைதியை ஏற்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இதேபோல, ஐக்கிய அரபு அமீரகத்தலைவர் ஷேக் முகமது பின் ஜயீத்அல்நஹ்யானுடனும் பிரதமர் மோடி பேசினார். அந்நாட்டின் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பிரதமர் மோடி, ஐக்கிய அரபு அமீரகத்துக்கு துணை நிற்பதாகவும் தெரிவித்தார்.

அங்கு இந்தியர்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்தார். மத்திய கிழக்கில் அமைதி, நிலைத்தன்மை ஏற்பட இந்தியா ஆதரவு அளிப்பதாகவும் கூறினார்.

பஹ்ரைன் மன்னர் ஹமாத் பின் இஷா அல் கலிபாவிடம், தாக்குதல் குறித்த தனது கவலையை தெரிவித்த பிரதமர் மோடி, அங்கு உள்ள இந்திய மக்களின் பாதுகாப்புக்கு தேவையான உதவிகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

*பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண மோடி வலியுறுத்தல்:* டெல்லியில் இந்தியா - கனடா இடையே 8 முக்கிய ஒப்பந்தங்கள் நேற்று கையெழுத்தாகின. இதைத் தொடர்ந்து, பிரதமர் மோடியும், கனடா பிரதமர் மார்க் கார்னியும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது, பிரதமர் மோடி கூறியதாவது: மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை அடைந்திருக்கிறது. உலகம் முழுவதும் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவ வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். எந்த பிரச்சினைக்கும் அமைதிப் பேச்சுவார்த்தை, ராஜ்ஜிய ரீதியிலான அணுகுமுறை மூலமாக மட்டுமே தீர்வு காணவேண்டும்.

இந்தியா, கனடா மட்டுமின்றி, ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் தீவிரவாதம் மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. தீவிரவாதத்தை வேரறுக்கவும், உலகில் அமைதி நிலைக்கவும் இந்தியாவும், கனடாவும் ஒன்றிணைந்து செயல்படும். இந்தியப் பெருங்கடல் - பசிபிக் பிராந்தியத்தில் இரு நாடுகளும் ஏற்கெனவே இணைந்து செயல்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஈரான் ஆதரவு பேச்சுகளை ‘கண்காணிக்க’ மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவு

வன்முறையைத் தூண்டக்கூடிய வகையில் ஈரானுக்கு ஆதரவாக தீவிரமாகப் பேசக்கூடியவர்களை கண்காணிக்குமாறும், சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகள் உருவாகாமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் - அமெரிக்க படைகள் தாக்குதலை தொடங்கியதை அடுத்து, மத்திய கிழக்கு நாடுகளில் நிலைமை மோசமடைந்து வருகிறது. இந்நிலையில், இந்த விவகாரத்தின் தாக்கத்தால் இந்தியாவில் வன்முறை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த பிப். 28-ம் தேதி அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கடிதம் ஒன்றை அளித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்து அதிகாரிகள் கூறும்போது, ‘மத்திய உள்துறை அமைச்சகம் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கடந்த பிப்ரவரி 28-ம் தேதி கடிதம் ஒன்றை அனுப்பியது. வன்முறையை தூண்டக்கூடிய கருத்துகளை வெளியிடும் ஈரான் ஆதரவு தீவிர பேச்சாளர்களை நெருக்கமாக கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தீவிரவாத அமைப்புகள் மற்றும் சர்வதேச பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்புடைய சமூக ஊடக கணக்குகளை கண்காணித்து, வன்முறையைத் தூண்டும் உள்ளடக்கங்கள் பரவுவதைத் தடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகள் உருவாகாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ள அமைச்சகம், சர்வதேச விவகாரங்கள் உள்நாட்டில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என எச்சரித்துள்ளது. அதற்கேற்ப மாநிலங்கள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், அந்தந்த மாநில எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் தூதரகங்கள், துணைத் தூதரகங்கள் மற்றும் பிற தூதரக அலுவலகங்களில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது. இஸ்ரேல், அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளுடன் தொடர்புடைய பிற நிறுவனங்களுக்கும் கூடுதல் பாதுகாப்பு வழங்குமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது’ என தெரிவித்தனர்.

அமெரிக்கா - இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் ஆயத்துல்லா அலி காமேனி உயிரிழந்ததை அடுத்து, காஷ்மீர் நாட்டின் பல பகுதிகளில் ஷியா பிரிவினர் போராட்டங்களில் ஈடுபட்ட நிலையில், இந்த அறிவுறுத்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## இபிஎஃப் வட்டி விகிதம் 8.25%–ஆக நீடிப்பு

**புது தில்லி, மார்ச்.4:**

2025-26-ஆம் நிதியாண்டுக்கான தொழிலாளா வருங்கால வைப்பு நிதி (இபிஎஃப்) வட்டி விகிதத்தை 8.25 சதவீதமாக தொழிலாளா வருங்கால வைப்பு நிதி அமைப்பு (இபிஎஃப்ஓ) நிாணயித்துள்ளது. இதன்மூலம், தொடாந்து 3-ஆவது ஆண்டாக வட்டி விகிதம் 8.25 சதவீதமாக நீடிக்க உள்ளது.

2022-23-ஆம் நிதியாண்டுக்கான இபிஎஃப் வட்டி விகிதம் 8.15 சதவீதமாக இருந்த நிலையில், 2023-24-ஆம் நிதியாண்டுக்கான இபிஎஃப் வட்டி விகிதம் 8.25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது.

2024-25-ஆம் நிதியாண்டுக்கான இபிஎஃப் வட்டி விகிதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை.

இந்நிலையில், மத்திய தொழிலாளா அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புது தில்லியில் மத்திய தொழிலாளா மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சா மன்சுக் மாண்டவியா தலைமையில், மத்திய அறங்காவலா்கள் வாரிய (சிபிடி) கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இபிஎஃப்ஓவில் முடிவுகளை எடுக்கும் தலைமை அமைப்பாக சிபிடி உள்ள நிலையில், அந்த வாரியம் 2025-26-ஆம் நிதியாண்டுக்கான இபிஎஃப் வருடாந்திர வட்டி விகிதத்தை 8.25 சதவீதமாக தொடர பரிந்துரைத்தது.

இந்த வட்டி விகிதம் குறித்து மத்திய அரசு அதிகாரபூா்வ அறிவிப்பை வெளியிடும். அதன் பின்னா், சந்ததாராா்களின் கணக்குகளில் 8.25 சதவீத வட்டித் தொகையை இபிஎஃப்ஓ வரவு வைக்கும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கீழடி பேசட்டும், வரலாறு மேலெழட்டும்! முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, மார்ச்.4:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

கீழடி பேசட்டும், வரலாறு மேலெழட்டும்! கீழடி, ஆதிச்சனூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள மத்திய பாஜக அரசிடம் உடனடி ஒப்புதல் வேண்டித் தமிழ்நாடு அரசு கடிதம் அனுப்பி 8 மாதங்கள் ஆகின்றன. இதற்கான முன்மொழிவுகள் ஜூலை 2025-ல் அனுப்பப்பட்டு, நவம்பரில் இந்தியத் தொல்லியல் துறையின் தலைவர் தலைமையிலான கூட்டத்திலும் அது எடுத்துக்கொள்ளப்பட்டது. இருந்தும், 8 மாதங்களாகியும் ஒப்புதல்கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் நாங்கள் கோரிக்கைவைக்கிறோம். மீண்டும் மீண்டும் அது கண்டுகொள்ளப்படாமல் இருக்கிறது. தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்வதற்கு உகந்த காலம் என்பது ஜனவரி முதல் ஜூலை வரைதான். இதைத் தவறவிட்டால், பருவமழையினால் களப்பணிகள் தடைபடும், முக்கிய ஆராய்ச்சிகள் தாமதமாகும், 2025-2026-ம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் வீணாகும்.



நான் கேட்க விரும்புவது... ஏன் இந்தத் தயக்கம்? தமிழ் நாகரிகத்தின் தொன்மைஎன்பது இந்தியாவுக்கு ஊறு விளைவிப்பதல்ல; இந்தியாவின் நாகரிகப் பண்பாட்டுக்குப் பெருமை சேர்ப்பது. எதைக் கண்டு பாஜக அரசு அஞ்சுகிறது? அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள், வரலாறு பேசட்டும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.


## ஏஐயின் பொய்யான தீர்ப்புகள் மூலம் வழக்குகளில் முடிவு: தவறான நடத்தைக்கு ஒப்பாகும்

**புது தில்லி, மார்ச்.4:**

ஆந்திரத்தில் உள்ள விசாரணை நீதிமன்றம் ஒன்று செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட பொய்யான தீா்ப்புகளை சுட்டிக்காட்டி, சொத்து தகராறு வழக்கில் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை அண்மையில் கவனத்தில் எடுத்துக்கொண்டு உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, ஆலோக் ஆராதே அமா்வு கூறியதாவது:

நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படாமல் செயற்கை நுண்ணறிவு



மூலம் உருவாக்கப்பட்ட பொய்யான தீா்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு, வழக்குகளில் முடிவு எடுப்பது என்பது தவறு அல்ல. மாறாக அது தவறான நடத்தைக்கு ஒப்பாகும். அதற்கு சட்ட பின்விளைவுகள் இருக்கும். எனவே இந்த விவகாரத்தை உச்சநீதிமன்றம் விரிவாக ஆராயும் என்று தெரிவித்தனா்.

இந்த விவகாரம் தொடா்பாக மத்திய அரசின் அட்டா்னி ஜெனரல், சொலிசிட்டா் ஜெனரல், இந்திய வழக்குரைஞா் சங்கம் பதிலளிக்க நீதிபதிகள் நோட்டீஸ் பிறப்பித்தனா். இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றத்துக்கு உதவ மூத்த வழக்குரைஞா் ஷியாம் திவானை நீதிபதிகள் நியமித்தனா்.

## அரசு நிர்வாக அமைப்புகளை ஏ.ஐ. மூலம் எளிமைப்படுத்துங்கள்: ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு முர்மு வேண்டுகோள்

**புது தில்லி, மார்ச்.4:**

தில்லியில் உள்ள குடியரசுத் தலைவா் மாளிகையில் திரௌபதி முா்முவை புதிதாக தோ்வான ஐஏஎஸ் அதிகாரிகள் குழுவினா் திங்கள்கிழமை நேரில் சந்தித்தனா். அப்போது அவா்களிடையே முா்மு பேசியதாவது:

மிகவும் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட மக்களை அரசு நலத் திட்டங்கள் சென்றடைய வேண்டும். அப்போதுதான் இந்தியா வளா்ந்த நாடாக மாறுவதற்கான பயன் கிடைக்கும். ஆதலால் எந்த சமூகத்தினரும் புவியியல், சமூக அல்லது பொருளாதார காரணங்களுக்காக பின்தங்கி விடாமல் இருப்பதை உறுதி செய்ய நீங்கள் (ஐஏஎஸ் அதிகாரிகள்) கடும் முயற்சிகளை எடுக்க வேண்டும். மாவட்ட நலனுக்கு அப்பாற்பட்டு மாநில முன்னுரிமைகளையும் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டியது உங்களது பொறுப்பாகும்.

நாட்டின் வளா்ச்சிக்கும், பொதுமக்களுக்கான சேவையிலும் கூட்டாகவும், ஒருங்கிணைந்தும், உறுதியுடனும் பணியாற்றுவது அவசியம். தொழில்நுட்பமும், புதிய வழிகளும் அரசு நிா்வாகம் துரித வேகத்தில் செயல்பட உதவும். ஆதலால் ஏ.ஐ. வழிகள், இ-நிா்வாக அமைப்புகள், டிஜிட்டல் குறைதீா்ப்பு முறைகளுக்கு நீங்கள் முழுவதும் மாற வேண்டும். இவை அரசு நிா்வாக அமைப்புகளை எளிமைப்படுத்தும். மேலும் கடைகோடி பகுதிக்கும் அரசு சேவை கிடைப்பதை உறுதி செய்யும். நவீன



தொழில்நுட்பங்களுக்கு மாறுகையில், அவை மனித உணா்வுகளை பிரதிபலிப்பதாகவும், சரியான தீா்வுகளை தருவதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

மூத்த அரசு நிா்வாகிகள் என்ற அடிப்படையில், உங்கள் செயல்பாடுகள் பசுமைக்கும், பருவநிலைக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாகவும், நீடித்த நிலையான வளா்ச்சியை ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். உங்களது தற்போதைய நடவடிக்கைகள்தான், எதிா்கால சந்ததியினரின் வாழ்க்கை தரத்தை நிா்ணயிக்க போகிறது என்பதை உணா்ந்து செயல்பட வேண்டும் என்றாா் அவா்.



## ஆண்டாள் திரு ஆடி பூரநந்தவனத்தில் எழுந்தருளினார்



ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் கோவில் மாசி மாதம் பூரம் நட்சத்திரத்தை முன்னிட்டு ஆண்டாள் திரு ஆடி பூரநந்தவனத்தில் எழுந்தருளினார்.

## பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் கருடசேவை




திருவல்லிக்கேனி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் நேற்று காலை கருடசேவை நிகழ்ச்சி நடந்தது.

## மயிலை கேசவர் சமுத்திர ஸ்நானம்



மாசி மகம் மயிலை கேசவர் சமுத்திர ஸ்நானம் நடந்தது.

## பெருமாள் கருடவாகனத்தில் திருவீதி உலா



மதுரை முனிச்சாலை காமராசர் சாலை ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயில் மாசிமகம் திருவிழாவை முன்னிட்டு பெருமாள் கருடவாகனத்தில் திருவீதி உலா.

## மாசி மகம் ஸமுத்திர தீர்த்தவாரி



பரிமள ரெங்கநாதர் சன்னதி, திருஇந்தளூர் மாசி மகம் ஸமுத்திர தீர்த்தவாரி புறப்பாடு.

## மாசி மகம் கஜேந்திர மோக்ஷம் கருட சேவை



மதுரை ஸ்ரீகள்ளழகர் மாசி மகம் கஜேந்திர மோக்ஷம் கருட சேவை புறப்பாடு.

## பெருமாள் சன்னதி பிரம்மோற்சவம் ஹனுமந்த வாகனம்



நெல்லூர் தல்பகிரி ஸ்ரீரங்கநாத பெருமாள் சன்னதி பிரம்மோற்சவம் ஹனுமந்த வாகனம் புறபாடு.


## 2026 –ஆம் ஆண்டு கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தேர்தலுக்கான விருப்ப மனு



**சென்னை, மார்ச் 04:**
சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாண்புமிகு துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான விருப்ப மனு வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய குழு தலைவர்,துணைத் தலைவர்,பேரூராட்சி தலைவர், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு பங்கேற்றார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வாலீஸ்வரர் சமுத்திர ஸ்நானம்



மயிலை வாலீஸ்வரர் சமுத்திர ஸ்நானம் புறப்பாடு

## 8வது நாள் காலவரையற்ற வேலை நிறுத்த தொடர் காத்திருப்பு போராட்டம்




**மதுரை, மார்ச் 04:**
தமிழ்நாடு வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு FERA (Federation Of Revenue Associations) சார்பாக, 9 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி 03.03.2026 8வது நாள் காலவரையற்ற வேலை நிறுத்த தொடர் காத்திருப்பு போராட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்று வருகிறது.

தலைமை மு.முகைதீன் அப் துல் காதர் நா.ரகுபதி கோ.சுரேஷ் பூ.ஜெயபாஸ்கர் வாழ்த்துரை க. நீதிராஜா மாநில செயலாளர் இரா.தமிழ் மாவட்டத்தலைவர் ஆ. பரமசிவன் மாவட்ட பொருளாளர் கூ. முத்துவேல் மண்டல செயலாளர் தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம்தி.செந்தில்குமார் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக பெருந்திரளாக கலந்து கொண்டனர். வருவாய் துறை கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற தொடர் காத்திருப்பு போராட்டத்தில் மதுரையில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கப்பட்டதுTNGPA மாநில தலைவர் என் ஜெயச்சந்திரன், கிருஷ்ணன் ,மாவட்ட செயலாளர் அ.பால்முருகன் மேற்கு வட்டக் கிளை தர்மர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

## ஸ்ரீ நடராஜ பெருமான், மாணிக்கவாசகர் மாசி சதுர்த்தி சிறப்பு வழிபாடு.







**திருவண்ணாமலை, மார்ச் 04:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அருள்மிகு ஸ்ரீமீனாட்சி உடனமர் சுந்தரேஸ்வரர் திருக்கோயில் ஸ்ரீ சிவகாமி உடனமர் ஸ்ரீநடராஜ பெருமான், மாணிக்கவாசகருக்கு மாசி சதுர்த்தி முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், விபூதி, பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வண்ண பூக்களால் அர்ச்சனைகள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி,பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் ஸ்ரீநடராஜபெருமானையும், மாணிக்கவாசகரையும் வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாசி மாதம் பௌர்ணமி சிறப்பு வழிபாடு









**விழுப்புரம், மார்ச் 04:**
விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி மாசி மாதம் பௌர்ணமியை முன்னிட்டு நல்ல தண்ணீர் குளத்தருகில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆற்காட்டம்மன் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், இளநீர், பன்னீர், தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், எலுமிச்சம்பழம் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும், வெகு சிறப்பாக பூஜைகள் நடைபெற்றது.


உபயதாரர் விழுப்புரம் மாஸ்டர் பேக்கரி ராஜா குடும்பத்தினர்கள் ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ ஆற்காட்டம்மனை வேண்டி அருள் பெற்றனர். பிரசாதங்களும் வழங்கப் பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## இளையான்குடியில் மாற நாயனார் மாசி மகம் நட்சத்திரம் குருபூஜை விழா







**மானாமதுரை, மார்ச் 4:**
சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் உள்ள சிவகங்கை தேவஸ் தானம் நிர்வாகத்திற்கு ட்பட்ட ஞானாம்பிகை சமேத ராஜேந்திர சோழீஅ ருள்மிகு ராஜேந்திர சோழீஸ்வரர் கோவிலில் அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவரான இளையான்குடி மாற நாய னார் சன்னதி உள்ளது.

இக்கோவிலில் மாசி மகம் விழாவில் எம்பிரான் மாறநாய னார் மகம் நட்சத்திரம் குரு பூஜை வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது. மாறநாயனார் அடியார் திருமுறை பாராயணத்து டன் தொடர்ந்து சிறப்பு அபிஷேகம் மலர் அலங்காரம் செய்யப்பட்டு தீபாரா தனை நடந்தது. ஏராள மான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

இதற்கான ஏற்பாடு களை இளையான்குடி எம் பிரான் மாறநாயனார் அடியார் திருக்கூட்டத்தின் சார்பில் செய்யப்பட்டு இருந்தது.

## காட்பாடியில் வரும் 5-ம் தேதி எருது விடும் விழா: போக்குவரத்து மாற்றம் - மாவட்ட காவல்துறை அறிவிப்பு!




**வேலூர், மார்ச் 04:**
வேலூர் மாவட்டம், காட்பாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பழைய காட்பாடி பகுதியில், ஸ்ரீபொன்னியம்மன் மற்றும் ஸ்ரீ கோட்டையம்மன் (எ) ரேணுகாம்பாள் ஆலயத்தின் 76-ஆம் ஆண்டு திருவிழா விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இந்த விழாவினை முன்னிட்டு வரும் மார்ச் 5-ஆம் தேதி அன்று எருது விடும் திருவிழா நடைபெற உள்ளது. இதனையொட்டி, பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், விழா நடைபெறும் அன்று போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக வேலூர் மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

வரும் 05.03.2026 அன்று காலை 6.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இந்த போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும். சித்தூர் பேருந்து நிறுத்தம் முதல் பிரம்மபுரம் செல்லும் சாலை முற்றிலும் போக்குவரத்துக்காக தடை செய்யப்படுகிறது.

**மாற்றுப் பாதை:**

பிரம்மபுரம் செல்லும் வாகனங்கள் (கனரக வாகனங்கள் தவிர்த்து), ஓடை பிள்ளையார் கோயில் ஜங்ஷனில் வளைந்து, அக்ஸீலியம் ரவுண்டானா அருகே உள்ள புத்துக்கோயில் வளைவு வழியாக வி.ஜி.ராவ் நகர் சென்று பிரம்மபுரம் காவல் நிலைய ஜங்ஷனை அடையலாம். திரும்ப வரும் வாகனங்களும் இதே பாதையைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சித்தூர் - திருவலம் மார்க்கம்: சித்தூரில் இருந்து திருவலம் செல்லும் வாகனங்கள், காட்பாடி- வள்ளிமலை சாலையில் வளைந்து பள்ளிக்குப்பம் மற்றும் சேர்க்காடு வழியாக திருவலம் செல்லலாம். இந்த தற்காலிக போக்குவரத்து மாற்றத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க, பள்ளி மற்றும் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் தங்களது பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளுமாறு காவல்துறை தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.






















ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901







## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact: 8428872887

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













## WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588





## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!



அகிலமும் அசைவற்று
போனது
ஒற்றை நொடியில்
நெற்றி முத்தத்தில்
நான் எனை
மறந்தபோது

பொழியும்
மழையைவிட
உன் பார்வையின்
சாரலே
என்னை நனைத்து
செல்கிறது

சிந்தும்
நீரை சிறைபிடிக்க
சிக்கி கொண்டது
உன் நினைவு

கனவு
கலைந்த பின்னும்
விழிகள்
மூடிக்கிடக்கின்றேன்
உன் பிம்பம்
கலைந்திட
கூடாதென

தொலைத்த
புன்னகையெனும்
முகவரியை
என்னவன்
தேடி கொடுத்தான்

# நட்பின் சிகரம் !

டூர் முடிந்து வீட்டுக்குள் நுழைந்த வுடன் அந்தக் கேள்வியை தன் மனைவியிடம் கேட்டான் கண்ணன். " லஷ்மி ! அம்மா எப்படி இருக்காங்க ? " உடனே லஷ்மியின் முகம் சூம்பிப் போனது.

" நீங்க வெளியூர் போனமறுநாளே ர்ந்து அத்தை சரியா சாப்பிடறதல்ல. தூங்கறதும் கிடையாது. எப்பப் பார்த் தாலும் விட்டத்த வெறிச்சுப் பார்த்துக் கி ட்டிருக்காங்க. கேட்டால் வாய் திற ந்து பேசமாட்டேங்குறாங்க..."

" ஏன், நீ சரியா கவனிக்கிறதில் லையா! வயசானவங்க. கொங்சம் முன்னபின்ன இருப்பாங்க. நாமதான் அனுசரிச்சுப் போகணும்.." என்று சிடு சிடுத்தவன் உடனே தன் அம்மா படுத் திருந்த அறைக்குள் நுழைந்தான். சுவற்றுப்பக்கம் திரும்பி கட்டிலில் படுத்திருந்தாள் கோகிலா. பின்னால் தொடர்ந்து வந்த மனைவியை ஒரு தரம் பார்த்தவன் கட்டில் அருகில் சென்று " அம்மா !" என அழைத்ததும் துள்ளி எழுந்து உட்கார்ந்தாள் கோகிலா.

" கண்ணா ! எப்பப்பா வந்தே ? " என் றாள். திடீரென மாமியாரிடம் தென் பட்ட மாற்றம் கண்டு சற்று ஆஸுவா சப்பட்டாள் லஷ்மி.

":இப்பதாம்மா." என கூறி நாற்காலி யை இழுத்துப் போட்டுக் கொண்டு தன் அம்மா கட்டிலருகே அமர்ந்தான்.

" நீ சரியா சாப்பிடறதில்ல; தூங்கறதில்லன்னு சொல்லி லஷ்மி கஷ்டப்பட்டுக்குறா. உன்னை லஷ்மி நல்லா கவனிச்சுக்கிறதில்லை யாம்மா ? "

" சே சே..அவள நான் குத்தம் சொன்னா என் நாக்குல புழு புழுத் துடும். பாவம் லஷ்மி ! நேரத்துக்கு வந்து டிஃபன் காஃபி ,சாப்பாடு எல்லாம் கொடுக்கறா. ஆனா எனக் குதான் பிடிக்க மாட்டேங்கிறது ! வாயில போட்டா தொண்டையில இறங்க மாட்டேங்கறது..."

லஷ்மிக்கு அப்பாடா என்றிரு ந்தது. நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டாள்.

" அப்போ என்னதாம்மா உன் கவலை? " என்றான் கண்ணன்.

" சொல்றேன்.. கண்ணா ! என்னோடஃப்ரண்ட் கனகவல்லியைத் தெரியுமில்லையா ? "

" மணியோடஅம்மாதானே...நல்லா வேத் தெரியும் "

" அந்தக் கனகவல்லியும் நானும் ஒண்ணா கோயிலுக்குப் போவோம். தரிசனம் முடிஞ்சு குளத்துப் படிக்க ட்டுல உட்கார்ந்து நேரம் போறது தெரியாம பேசிக்கிட்டிருப்போம். அதுக்கப்புறமா பிரிய மனசில்லாம நடையைக் கட்டுவோம்...." ஹூம் என பெருமூச்சு விட்ட கோகிலா தொடர்ந் தாள். " கடந்த ஒரு மாசமா அவள் கண்ணுல தென்படல்ல.விசாரி ச்சுப் பார்த்தேன். இடிமாதிரி பதில் கிடை ச்சது..கண்ணா...பாவிப்பய அந்த மணி கனகவல்லியக் கொண்டு போய் முதியோர் இல்லத்தில சேர்த் திட்டானாம் ! " ஒ வென்றுகுரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.

" சரிம்மா ! அதுக்கு நாம என்ன செய்யமுடியும் ! அவனாச்சு. அவன் அம்மாவாச்சு ! இதுக்காக நீ ஏம்மா இப்படி கஷ்டப்பட்டுக்கிறே ! "

" நீ சுலபமா சொல்லிட்டே ! எனக்கு கனகவல்லியைப் பார்க்காம இருக்க முடியாது. அவள் இங்கவர முடியாது ன்னாஎன்னக் கொண்டுபோய் அவள் இருக்கற இடத்தில சேர்த்துடு ! "

" அம்மா..." என கத்தியவன் உடனே சுதாரித்துக் கொண்டான். லஷ்மியும் திகிலடைந்துபோய் இருந்தாள்.

கண்ணன் தொடர்ந்தான்." அம்மா ! ஒவ்வொரு இடத்திலயும் பிள்ளதான் தன் அம்மாவைக் கொண் டுபோய் ஹோமுல சேர்ப்பான். ஆனா இங்க உன்னைச்சேர்க்கச் சொல்லி நீ என்கிட்ட கெஞ்சறே.ஏம்மா நாங்க உன்னை என்னிக்காவது உதாசீனம் செய்திருக்கோமா... இல்ல உன் மனம் கோணும்படி நடந்திருக்கோமா.யாரோ ஒருத்திக்காக எங்களவிட்டுப் பிரிய உனக்கு எப்படிம்மா மனசு வரது! "

மகனின் பேச்சைக் கேட்ட கோகிலா மனம் இளகியது. தான் அவசரப்பட்டு வார்த்தைக் கொட்டி யதற்கு உள்ளுக்குள் புழுங்கினாள். மகனின் கைகளை ஆதுரத்துடன் பற்றினாள்.

" கண்ணா ! கனகவல்லிமேல இருக்கறஅதீத பாசத்தினால நான் அப்படி பேசிட்டேன். ஸாரிப்பா.." என்றவள் தொடர்ந்தாள். " கண்ணா ! இப்படிச் செய்தாலென்ன ? "

" சொல்லும்மா !"

" வாரா வாரம் ஞாயிற்றுக் கிழமைகளில் என்னை அந்த ஹோ முக்கு கூட்டிக்கிட்டுப்போ. நான் கனக வல்லியோட கொஞ்ச நேரம் மனசு விட்டுப் பேசறேன். எனக்கும்மனசில இருக்கற பாரம் குறையும். என்ன சொல்றே ? "

" சரிம்மா ! அதுக்கு நான் கேர ண்டி ! இனிமேல் நீ சகஜமா நடந்து ப்பே இல்லயா ? "

" ஓ...இதோ நான் ரெடி மருமகளே.. காஃபி எங்கே ? ".

லஷ்மி சிரித்தப்படியே " இதோ ரெடி பண்ணிடறேன் அத்தை ! " கவலை மறந்து கிச்சனுக்குள் ஓடினாள்.

தான் வாங்கிச் சென்ற ஒரு ஆங்கிலப்படத்தின் சீடியைத் திருப்பி கண்ணனிடம் கொடுப்பதற்காக அவன் வீட்டுக்கு வந்திருந்தான் மணி. அப்படி வந்தவன் அங்கு நிகழ்ந்த உரையாடலைக் கேட்டான். கேட்டவ னுக்குள் ஒரு இரசாயன மாற்றமே நிகழ்ந்தது !

நட்புக்காக ஏங்கும் கண்ணனின் அம்மா எங்கே. கொஞ்சம்கூட நெஞ் சில் ஈரமில்லாமல் பெண்டாட்டி பேச் சைக் கேட்டு தன் அம்மாவைக்கொண் டுபோய் முதியோர இல்லத்தில் சேர்த்த தான் எங்கே ! நட்புக்காக தன்னைக் கொண்டு போய் ஹோமில் சேர்க்கச் சொன்ன கண்ணனின் அம்மாவை நினைத்து பூரித்துப் போனான் மணி.

கணணனின் அம்மா முதியோர் இல்லத்துக்குச் செல்லக்கூடாது. அதற்கு முன்னால் தன் அம்மாவை வீட்டுக்கு கூட்டிக்கிட்டு வரவேண்டும் என்கிற உறுதியான முடிவு முடிவு மனத்தில் எழுந்திட வந்த சுவடு தெரி யாமல் திரும்பி நடந்தான் மணி.

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**

# தினம் ஒரு சமையல்



## ஊளி மீன் குழம்பு

தேவையான பொருட்கள்:

ஊளி மீன் சுத்தம் செய்தது -1 கிலோ
கெட்டியான புளிக்கரைசல் -1கப்
சின்ன வெங்காயம் -1/4கப்
இஞ்சி பூண்டு விழுது -1டீஸ்பூன்
பூண்டு தட்டியது -20
நல்லெண்ணெய் -1/4கப்
கடுகு, உளுத்தம்பருப்பு -1/4 டீஸ்பூன்
வெந்தயம் -1/4 டீஸ்பூன்
மஞ்சள் தூள் -1டீஸ்பூன்
மிளகாய் தூள் -2டேபிள் ஸ்பூன்
உப்பு -தேவையானஅளவு
கறிவேப்பிலை -சிறிதளவு
பொடியாக கட் செய்த கொத்தமல்லித்தழை

வறுத்து பொடி செய்ய :

கடலைப்பருப்பு -1/2டீஸ்பூ
உளுத்தம்பருப்பு -1/4 டீஸ்பூன்
சீரகம் -1டீஸ்பூன்
கொத்தமல்லி -2டேபிள் ஸ்பூன்
வெந்தயம் -1/4 டீஸ்பூன்
மிளகு, -1/2டீஸ்பூன்
சோம்பு -1/4 டீஸ்பூன்
வேப்பிலை -சிறிதளவுகறி




செய்முறை:

வெறும் வாணலியில் வறுத்து பொடி செய்ய வேண்டிய பொருட்களை தனித்தனியாக வறுத்து பொடி செய்து வைக்கவும். இதை புளிக்கரைசலில் போட்டு, உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள் சேர்த்து கரைத்து வைக்கவும்.

மண் சட்டியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, வெந்தயம் சேர்த்து வறுத்து வெங்காயம், பூண்டு சேர்த்து சிவக்க வதக்கவும். இதில் கறிவேப்பிலை, இஞ்சி பூண்டு விழுது சேர்த்து சிறிது வதக்கி புளிக்கரைசலை ஊற்றி தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். கெட்டியானதும் மீன்களை சேர்த்து கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை சேர்த்து சிம்மில் 2 நிமிடம் வைத்து அடுப்பை அணைக்கவும். சாதத்துடன், இட்லி, தோசை உடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

# வாழ்க்கை தத்துவம்...




நட்பையும் மகிழ்ச்சியையும் இரட்டிப்பாக்க அருகிலிருப்பவர்களுக்கு கொடுத்துவிடுங்கள்.

தவறு செய்வது மனித இயல்பு.
நாம் ஒரு தவறை செய்யும்போது,
அதை நியாயப்படுத்தக்கூடாது.
அதை மறுக்கக்கூடாது.
பிறரைக் குற்றம் சாட்டக்கூடாது.
அதை மீண்டும் செய்யக்கூடாது.
பிறகு என்னதான் செய்யவேண்டும்,
ஒப்புக்கொள்ளுங்கள்.
மன்னிப்புக் கோருங்கள்.
கற்றுக் கொள்ளுங்கள்.

தவறே செய்யாத மனிதன் இல்லை, தவறை திருத்திக் கொள்ளாதவன் மனிதனே இல்லை.

வாழ்க்கை எளிதாகிவிடும். மன்னிப்பை கேட்பதற்கும், கொடுப்பதற்கும் நாம் கற்றுக்கொண்டால்.

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: பக்கத்து வீட்டுக்காரன் சரியான பைத்தியமா இருப்பான் போல!*

*மனைவி: ஏன் என்னாச்சு?*

*கணவன்: நான் ஹேப்பி பொங்கல்னு சொல்றேன்.. அவன் ஹேப்பி இட்லினுட்டு போறான்.*



# முத்தாமணக்கு பயன்கள்



முத்தாமணக்கு (நெய்வேலி காட்டாமணக்கு) வேலி தடுப்பானாகவும், பசுந்தாள் உரமாகவம் பயன்படும் ஒரு நிரந்தரச் செடியாகும். இதன் இலைச்சாறு மற்றும் எண்ணெய் மருத்துவ குணம் வாய்ந்தது. குறிப்பாக பல் வலி, பற்சிதைவு, தாடி வளர்ச்சி (தேங்காயெண்ணெயுடன் கலந்து), தோல் நோய்கள் மற்றும் வீக்கங்களுக்கு சிகிச்சையளிக்க இலைகள் மற்றும் எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றன.

முத்தாமணக்கு செடியின் முக்கிய பயன்கள்:

மருத்துவப் பயன்கள்:

பல் துலக்குதல்: கிராமப்புறங்களில் இதன் குச்சிகளைக் கொண்டு பல் துலக்குவதன் மூலம் பல் சொத்தை மற்றும் பற்சிதைவை உண்டாக்கும் கிருமிகள் அழிகின்றன.

வீக்கம் மற்றும் வலி: இலைச்சாறு வீக்கங்கள் மற்றும் வலி நிவாரணியாகப் பயன்படுத்தப்படுகிறது.

தோல் நோய்கள்: தோல் அலர்ஜி, பூச்சி கடிகள் போன்றவற்றுக்கு இலைகள் தடவப்படுகின்றன.

தாடி/முடி வளர்ச்சி: கருவேப்பிலை பொடியுடன் முத்தாமணக்கு எண்ணெய் மற்றும் தேங்காயெண்ணெய் கலந்து தைலமாகப் பயன்படுத்தப்படுகிறது.

வேளாண் பயன்கள்:

வேலி பயிர்: நிலங்களைச் சுற்றி வேலியாகப் பயன்படுத்தப்படுகிறது.

பசுந்தாள் உரம்: நிலத்தின் மண் வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உரமாக இலைகள் பயன்படுகின்றன.

இதர பயன்கள்:

எண்ணெய்: இதன் விதைகள் மூலம் எடுக்கப்படும் எண்ணெய் உயிரி எரிபொருளாகவும் (BIODIESEL), சில தொழில்துறை பயன்பாடுகளுக்கும் உகந்தது.

அலங்கார தாவரம்: தோட்டம் மற்றும் வேலியமைப்பில் அலங்கார செடியாகவும் வளர்க்கப்படுகிறது.

# பிரபல நடிகர் ஹரிஷ் கல்யாணுக்கு குழந்தை பிறந்தது... நடிகரே பகிர்ந்த பதிவு



தமிழ் சினிமாவில் வலம்வரும் இளம் நடிகர்களில் ஒருவர்.

கடந்த 2010ம் ஆண்டு வெளியான சிந்து சமவெளி என்ற படத்தின் மூலம் தனது திரைப்பயணத்தை தொடங்கியவர் தான் ஹரிஷ் கல்யாண். அதன்பின் பொறியாளர், வில் அம்பு போன்ற படங்களில் மூலம் தமிழ் மக்களின் கவனம் பெற்றவர் தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார்.

இடையில் அதாவது கடந்த 2017ம் ஆண்டு விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பிக்பாஸ் முதல் சீசனில் வைல்ட் கார்ட்டு என்ட்ரி கொடுத்தார். நிகழ்ச்சியில் இவரது விளையாட்டு, நட்பு பழக்கம் போன்ற விஷயங்களால் பாராட்டப்பட்டார்.

பின் Pyaar Prema Kaadhal, Ispade Rajavum Idhaya Raniyum, பார்க்கிங், லப்பர் பந்து, டீசல் போன்ற படங்கள் மூலம் ஹரிஷ் கல்யாணிற்கு பெரிய வெற்றி கிடைத்தது.

சினிமாவில் பிஸியான நடிகராக வலம்வந்த ஹரிஷ் கல்யாண் கடந்த 2022ம் ஆண்டு நர்மதா உதயகுமார் என்பவரை திருமணம் செய்துகொண்டார்.


இந்த நிலையில் ஹரிஷ் கல்யாண் ஒரு சந்தோஷ செய்தி வெளியிட்டுள்ளார். அதாவது ஹரிஷ் கல்யாண்-நர்மதாவிற்கு இன்று மார்ச் 2 பெண் குழந்தை பிறந்துள்ளதாம்.



## சினிமா

தமிழும் சரஸ்வதியும் சீரியலில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை தர்ஷனா. தற்போது சேலையில் எடுத்த தனது சமீபத்திய போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

# தீவிரமடையும் போர், துபாயில் சிக்கிக்கொண்ட தமிழ் சினிமா நடிகர்... அவர் போட்ட பதிவு




அமெரிக்கா, இஸ்ரேல்-ஈரான் இடையேயான ராணுவ தாக்குதல்கள் தொடங்கியதையடுத்து உலகம் முழுவதும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக வளைகுடா நாடுகள் தாக்குதலுக்கு ஆளாகலாம் என்பதால் பல விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. ஈரான் ராணுவம் துபாயிலுள்ள அமெரிக்க ஆதரவு நிறுவனங்களைத் தாக்கி வருகிறது.

ஐக்கிய அமீரகம் ஈரானின் தாக்குதல்களைச் சமாளிக்கும் வகையில் தாக்குதல் ஏவுகணைகளை வானிலேயே அழித்தும் வருகின்றன.

துபாயில் கார் பந்தயத்தில் நடிகர் அஜித் கலந்துகொண்டு வருவது அனைவருக்கும் தெரியும். போர் பதற்றம் தொடங்கியதும் ரசிகர்கள் அஜித் குறித்து கேள்வி எழுப்ப அவர் பாதுகாப்பாக இருப்பதாக அவரது மேனேஜர் தரப்பில் தகவல் வந்தது.

அஜித்தை போல் பல பிரபலங்கள், இந்திய மக்கள் பலரும் துபாயில் சிக்கியுள்ளனர். தமிழ் சினிமாவின் பிரபல நடிகர் வசந்த் ரவியும் துபாயில் உள்ளாராம்.

அவர் தனது இன்ஸ்டாவில், பிளான் செய்ததை விட துபாயில் அதிக நாள் இருப்பது போல் ஆனது, இங்கே சிக்கிக்கொண்டேன். இங்கு நடப்பவை பார்க்கும் போது மனதிற்கு மிகவும் கஷ்டமாக உள்ளது என பதிவு செய்துள்ளார்.

# முருகப்பெருமானுக்கு சுருட்டை நிவேதனமாக படைக்கும் அதிசயக் கோவில் பற்றித் தெரியுமா?

தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலையில் அமைந்துள்ள சுப்ரமணிய சுவாமிக் கோவில் 1500 வருடம் பழமையானதாகும். இக்கோவிலில் தான் நிவேதனமாக சுருட்டு வழங்கப்படும் வினோதமான பழக்கம் இருக்கிறது.




முன்னொருக்காலத்தில் முருகரின் தீவிர பக்தரான கருப்பமுத்துபிள்ளை என்பவர் முருகனை தரிசித்தப் பிறகே உணவு உண்ணும் பழக்கத்தை வாடிக்கையாக கொண்டிருந்தார். முருகனுக்கு நடக்கும் திருப்பணியிலும் இவர் ஈடுப்பட்டிருந்தார்.

ஒருநாள் எப்போதும் போல முருகனை தரிசிக்க விராலிமலைக்கு வந்தார் கருப்பமுத்துபிள்ளை. அச்சமயம் வானம் நன்றாக இருட்டி மழைப் பெய்யத் தொடங்கியது. இதனால் அவரால் ஆற்றைக் கடக்க முடியவில்லை. கருப்பமுத்து பிள்ளை ஒரு மேடானப்பகுதியில் தங்கினார். ஆற்றில் வெள்ளம் வந்து தண்ணீர் கரைப்புரண்டு ஓடத் தொடங்கியது.

நீண்டநேரம் ஆகியதால் கருப்பமுத்துபிள்ளைக்கு பசிக்கத் தொடங்கியது. குளிர்த் தாங்க முடியாமல் சுருட்டை பற்ற வைத்தார். அருகில் மற்றொருவர் நிற்பதை பார்த்த கருப்பமுத்துபிள்ளை குளிருக்கு இதமாக இருக்கட்டும் என்று அவருக்கும் ஒரு சுருட்டை கொடுத்தார். அந்த நபரும் சுருட்டை வாங்கிக் கொண்டு கருப்பமுத்துபிள்ளையை ஆற்றை கடக்க உதவினார். பிறகு கருப்பமுத்து கோவிலை அடைந்ததும் அங்கே முருகப்பெருமானின் முன்பு சுருட்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இதை கருப்பமுத்துபிள்ளை அங்கிருந்த மக்களிடம் கூற அனைவரும் ஆச்சர்யமடைந்தனர். அன்றிலிருந்து முருகப்பெருமானுக்கு சுருட்டு நைவேத்தியமாக மாலை வேளை வழங்கப்படுகிறது. பிறகு புதுக்கோட்டை மகாராஜா இப்பழக்கத்திற்கு தடைவிதிக்க, அவர் கனவில் முருகப்பெருமான் தோன்றி, 'பிறர் துன்பம் கண்டு அன்பை வழங்கும் குறியீடாகவே சுருட்டு நிவேதனம் இருக்கிறது' என்று கூற, அவர் தடையை நீக்கியதாகவும் சொல்லப்படுகிறது.

அன்றிலிருந்து இன்றுவரை இப்பழக்கம் விராலிமலை முருகன் கோவிலில் வழக்கத்தில் உள்ளது. பக்தர்கள் சுருட்டை நிவேதனமாக பெற்றுச் சென்று வீட்டில் வைக்கிறார்கள். பக்தியுடனும், அன்புடனும் நாம் கடவுளுக்கு படைப்பதை அவர் முழுமனதுடன் ஏற்றுக் கொள்வார் என்பதை உணர்த்துவதாக இந்நிகழ்வு அமைகிறது. இத்தலத்தில் முருகனை வழிப்பட்டால் ஆயுள், மனஅமைதி, குழந்தைப் பேருக்கிட்டும் என்று சொல்லப்படுகிறது.




-சிவ.முத்து லட்சுமணன்
போச்சம்பள்ளி

## தினம் ஒரு தலைவர்கள்

# அல்லூரி சீதாராம இராஜு வரலாறு

அல்லூரி சீதாராம ராஜீ (பிறப்பு: 1897-98 - இறப்பு:1924 மே 7) இவர் இந்திய சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்ட ஒரு இந்திய புரட்சியாளராவார். 1882 மெட்ராஸ் வனச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பதேரு காட்டில் பழங்குடியினரின் சுதந்திரமான நடமாட்டத்திற்கான அதன் கட்டுப்பாடுகள், அவர்களின் பாரம்பரிய போடு விவசாய முறைமையில் ஈடுபடுவதைத் தடுத்தன. இது சாகுபடியை மாற்றியது . 1922-24ல் ராம்பா கிளர்ச்சிக்கு இராஜு தலைமை தாங்கினார். அப்போது, ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மற்றும் விசாகப்பட்டினம் பிராந்தியங்களின் எல்லைப் பகுதிகளில், இன்றைய ஆந்திரப் பிரதேசத்தில், பிரித்தானிய இராச்சியத்திற்கு எதிராக, பழங்குடி மக்கள் மற்றும் பிற அனுதாபிகள் கொண்ட ஒரு குழு போராடியது. மேலும் ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது. இதனால் இவரை உள்ளூர் மக்கள் "மான்யம் வீருடு" ("காடுகளின் நாயகன்") என்று அழைத்தனர்.





முந்தைய ஒத்துழையாமை இயக்கத்தின் அவசியத்தைக் கூறி பழங்குடி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய இராஜு, சிந்தப்பல்லி, ரம்பச்சோதவரம், தம்மனப்பள்ளி, கிருட்டிணா தேவி பேட்டை, ராஜவோம்மங்கி, அடடீகலா, நர்சிப்பட்டிணம் மற்றும் அன்னவரம் ஆகிய இடங்களில் உள்ள காவல் நிலையங்களில் தாக்குதல் நடத்தினார். துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகளைத் கைப்பற்றி, தம்மனப்பள்ளி அருகே இரண்டு பிரித்தன் காவல் அதிகாரிகளை கொன்றார். இராஜு இறுதியில் சிந்தப்பல்லி காடுகளில் ஆங்கிலேயர்களிடம் சிக்கி, பின்னர் ஒரு மரத்தில் கட்டப்பட்டு, கொய்யூரு கிராமத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது கல்லறை கிருட்டிணா தேவி பேட்டை கிராமத்தில் இன்றும் உள்ளது.

வாழ்க்கை

அல்லூரி சீதாராம இராஜுவின் ஆரம்பகால வாழ்க்கையின் விவரங்கள் வேறுபடுகின்றன. விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பீமுனிபட்டணத்தில் இவர் பிறந்தார் என்று ஒரு அதிகாரப்பூர்வ அறிக்கை தெரிவிக்கிறது. பீமிலிபட்டணம் சட்டமன்ற சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள பாண்டரங்கி கிராமத்தை இவரது துல்லியமான பிறந்த இடமாக பெயரிடும் சமீபத்திய செய்திகளும் வந்துள்ளன. இவர் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள மொகல்லு என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார் எனவும் பல வட்டாரங்கள் கூறுகின்றன.

இவரது பிறந்த தேதியும் சர்ச்சைக்குரியது. பல ஆதாரங்கள் இதை 1897 சூலை 4 என்றும் ஆனால் மற்றவர்கள் இவர் 1898 இல் பிறந்ததாகவும் கூறுகின்றனர். மேலும், குறிப்பாக இவர் பிறந்த தேதி 4 ஜூலை 1898 என்பதாகும்.

இராஜுவின் பெற்றோர் வெங்கடராம இராஜு மற்றும் சூரியநாராயணம்மா. இவர்கள் சத்திரிய வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். சமகால அறிக்கைகள் இவர் ஒரு தனித்துவமான கல்வியைக் கொண்டிருந்தன. ஆனால் 18 வயதில் சன்யாசியாக மாறுவதற்கு முன்பு ஜோதிடம், மூலிகை, கைரேகை மற்றும் குதிரை சவாரி ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட அக்கறை காட்டினார். இவர் பின்னர் கோதாவரி பகுதியைச் சுற்றித் திரிந்தபோது, இந்த திறமைகளும் இவரது கவர்ச்சியான தன்மையும் பழங்குடி மக்களிடையே இவருக்கு மாயாஜால சக்திகள் மற்றும் புனித அந்தஸ்து உடையவர் என்ற புகழைப் பெற்றன.

இராஜு இறுதியில் சிந்தப்பல்லி காடுகளில் ஆங்கிலேயர்களிடம் சிக்கினார். கொய்யூரு கிராமத்தில் ஒரு மரத்தில் கட்டப்பட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரது கல்லறை கிருஷ்ணா தேவி பேட்டை கிராமத்தில் உள்ளது.

# ரஷியாவிடம் இருந்து 5 எஸ்-400 வான் பாதுகாப்பு சாதனங்களை வாங்கும் இந்தியா



**புதுடெல்லி, மார்ச் 4:**

ரஷியாவிடம் இருந்து 5 எஸ்-400 சுதர்சன ரக வான் பாதுகாப்பு சாதனங்களை வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த ஆண்டு நடந்த ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கையின்போது இந்த சாதனங்கள் இந்தியாவுக்கு வலுவாக கைகொடுத்தன.

அப்போது பாகிஸ்தானின் 5 முதல் 6 போர் விமானங்களை இந்த வான் பாதுகாப்பு சாதனங்கள் வீழ்த்தின. தவிரவும், அந்நாட்டின் உளவு விமானம் ஒன்றை 300 கி.மீ. தொலைவில் அந்நாட்டிற்குள்ளேயே வைத்து வீழ்த்தியது. இதனால், இந்திய விமான படை திறமையாக செயல்பட, அது பெரிய அளவில் உதவியது.

இதனை தொடர்ந்து, இந்த வகை ஆயுதங்களை அதிக அளவில் வாங்க இந்திய விமான படை ஆர்வம் காட்டியுள்ளது. இதனால், வான் பாதுகாப்பு திறன்கள் இன்னும் வலுப்படும். இதற்காக ரஷிய தரப்பிடம் ஆலோசனையை இந்தியா முன்பே நடத்தி விட்டது. இதற்கான டெண்டர் அறிவிப்பும் விரைவில் வெளியிடப்படும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகை ஆயுதங்களை வாங்குவதற்காக கடந்த 2018-ம் ஆண்டு ரஷியாவுடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அப்போது 5 எஸ்-400 ரக வான் பாதுகாப்பு சாதனங்களை வாங்க முடிவானது.

அதன்படி இதுவரை 3 எஸ்-400 ரக வான் பாதுகாப்பு சாதனங்களை இந்தியா வாங்கியுள்ளது. அவை செயல்பாட்டிலும் உள்ளன. மீதமுள்ள 2 சாதனங்களை வழங்கும்படி ரஷியாவிடம் இந்தியா கேட்டுள்ளது. இதன் திறமையான செயல்பாடு, துல்லிய தாக்குதல் போன்றவற்றால், இதுபோக கூடுதலாக 5 எஸ்-400 சுதர்சன ரக வான் பாதுகாப்பு சாதனங்களை வாங்க இந்தியா திட்டமிட்டு உள்ளது.

# ஆந்திராவில் பட்டாசு வெடி விபத்துகளை தடுக்க, சிவகாசிக்கு சென்று ஆய்வு நடத்த அதிகாரிகளுக்கு சந்திரபாபு நாயுடு உத்தரவு

**அமராவதி, மார்ச் 4:**

பட்டாசு வெடி விபத்துகளை தடுக்க சிவகாசிக்கு சென்று ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யுங்கள் என ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.





ஆந்திர மாநிலம் காக்கி நாடா வேட்லபாளையம் பகுதியில் கடந்த சனிக்கிழமை பிப்ரவரி 28ம் தேதி பட்டாசு தொழிற்சாலையில் பயங்கர வெடி விபத்து நடந்தது. இந்த விபத்தில் 23 தொழிலாளர்கள் பரிதாபமாக உடல் கருகி உயிரிழந்தனர். 9 பேர் ஆபத்தான நிலையில் காக்கி நாடா அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இறந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.20 லட்சம் நிதி உதவியை ஆந்திர அரசு அறிவித்தது.

மேலும் பிரதமர் தரப்பில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ. 2 லட்சம் அறிவிக்கப்பட்டது. பாஜகவின் ஆந்திர மாநில தலைவர் மாதவ் தரப்பில் இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்கப்பட்டது. விபத்து குறித்து முழு விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

சிவ காசிக்கு செல்லுங்கள் இந்நிலையில், நேற்று அமராவதியில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தலைமையில், பட்டாசு தொழிற்சாலை விபத்துகளை எவ்வாறு தடுப்பது ? லைசென்ஸ்களை எவ்வாறு முறைப்படுத்துவது ? தொழிற்சாலைகளுக்கான நிபந்தனைகளை எவ்வாறு வழி வகுப்பது ? விபத்துகள் நடக்காமல் இருக்க எடுக்க வேண்டிய நிபந்தனைகள் என்ன? என்பது குறித்து ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறுகையில், ”தமிழகத்தில் உள்ள சிவகாசியில் கோடிக் கணக்கில் ஆண்டுதோறும் பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு அதிகாரிகள் குழு சென்று ஆய்வு செய்யுங்கள். அங்கு எவ்வாறு நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுகின்றன ? என்று நேரில் சென்று அறிந்து கொண்டு, அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யுங்கள்” என உத்தரவிட்டார்.

# ‘பிறந்தது முதல் பட்டப்படிப்பு முடிக்கும் வரை பெண்களுக்கு நிதி உதவி’ - டெல்லி முதல்-மந்திரி ரேகா குப்தா வெளியிட்ட அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 4:**

பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ‘டெல்லி லட்சாதிபதி மகள் திட்டம்’ (Lakhpati Beti Yojana) என்ற திட்டத்தை டெல்லி முதல்-மந்திரி ரேகா குப்தா இன்று அறிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது;-




“டெல்லியின் மகள்களுக்காக இன்று நாங்கள் புதிய திட்டத்தை அறிவித்துள்ளோம். இந்த திட்டத்தின்படி, டெல்லியில் பெண் குழந்தைகளின் பிறப்பு முதல் அவர்கள் பட்டப்படிப்பு முடிக்கும் வரை அரசாங்கம் அவர்களின் வங்கி கணக்கில் பல்வேறு தவணைகளில் 56 ஆயிரம் ரூபாய் செலுத்தும். இதன்படி ஒரு பெண் பட்டப்படிப்பை முடிக்கும்போது, அவரது கணக்கில் அரசு செலுத்தி வந்த தொகை மற்றும் வட்டியுடன் சேர்த்து சுமார் 1 லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கும். இதன் மூலம் டெல்லியின் மகள்கள் பட்டப்படிப்பை முடிக்கும்போது லட்சாதிபதிகளாக வெளியே வருவார்கள்.” இவ்வாறு அவர் தெரிவித்தார். இந்த திட்டத்தின்படி, பெண் குழந்தைகள் பிறக்கும்போதே அவர்களின் பெயரில் வங்கி கணக்கு தொடங்கப்பட்டு, அதில் ரூ.11 ஆயிரம் செலுத்தப்படும். பின்னர் அந்த குழந்தை 1-ம் வகுப்பு, 6-ம் வகுப்பு, 9-ம் வகுப்பு, 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு ஆகியவற்றை நிறைவு செய்யும்போது தலா ரூ.5 ஆயிரம் செலுத்தப்படும். பின்னர் பட்டப்படிப்பு முடிக்கும்போது ரூ.20 ஆயிரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அடுக்குமாடி குடியிருப்பின் 8வது மாடியில் இருந்து தவறி விழுந்து பெண் உயிரிழப்பு

**ஜெய்ப்பூர், மார்ச் 4:**

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மாவட்டம் ஜெகத்புரா பகுதியை சேர்ந்த ஓய்வுபெற்ற அரசு பொறியாளர் திலீப் குமார். இவரது மனைவி ஊர்மிளா கவூர் (வயது 55). இந்த தம்பதிக்கு அங்கித் என்ற மகன் உள்ளார். திலீப் குமார் ஜெகத்புராவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பின் 8வது மாடியில் குடும்பத்துடன் வசித்து வந்தார். இதனிடையே, பணியின்போது லஞ்சம் பெற்றதாகவும் , ஊழலில் ஈடுபட்டதாகவும் சமீபத்தில் திலீப் குமாரை ராஜஸ்தான் மாநில லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் கைது செய்தனர்.

இந்நிலையில், ஊர்மிளா கவூர் இன்று அடுக்குமாடி குடியிருப்பில் 8வது மாடியில் உள்ள வீட்டின் பால்கனி பகுதியில் நின்றுகொண்டிருந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக ஊர்மிளா 8வது மாடியில் இருந்து தவறி கீழே விழுந்தார். இதில் படுகாயமடைந்த ஊர்மிளாவை மீட்ட குடியிருப்புவாசிகள் அவரை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மருத்துவமனையில் ஊர்மிளாவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு: இந்தியாவில் பெட்ரோல் - டீசல் விலை உயராது!

**புதுடெல்லி, மார்ச் 4:**

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும் இந்தியாவில் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை அதிகரிக்க வாய்ப்பில்லை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈரான் மற்றும் இஸ்ரேல்-அமெரிக்கா இடையேயான மோதலால் சாவதேச அளவில் கச்சா எண்ணெய் விலை 9 சதவீதம் உயர்ந்து ஒரு பீப்பாய் 80 டாலர்களாக அதிகரித்துள்ள போதிலும் இந்தியாவில் விலை மாற்றமின்றி பெட்ரோல், டீசல் விற்பனை செய்யப்படும் என மத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகையில், ‘இந்தியாவில் கடந்த 2022 முதல் பெட்ரோல், டீசல் சில்லறை விலை மாற்றமின்றி தொடர்கிறது. இந்த இடைப்பட்ட காலத்தில் பல்வேறு தருணங்களில் புவிஅரசியல் சூழலால் சாவதேச அளவில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்தது.

ஆனால் இந்தியன் ஆயில் (ஐஓசி), பாரத் பெட்ரோலியம் (பிபிசிஎல்) மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் (ஹெச்பிசிஎல்) ஆகிய பொதுத் துறை நிறுவனங்கள் பெட்ரோல் மற்றும் டீசல் விலையை உயாத்தவில்லை.

இதனால் கச்சா எண்ணெய் விலை உயரும்போது இந்நிறுவனங்கள் நஷ்டத்தையும், குறையும்போது லாபத்தையும் ஈட்டி வருகின்றன. தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் விரைவில் பேரவைத் தோதல் நடைபெறவுள்ள நிலையில், பெட்ரோல், டீசல் விலையை உயாத்தி எதிர்க்கட்சிகளின் விமாசனத்துக்குள்ளாக மத்திய அரசு விரும்பவில்லை.

சாவதேச கச்சா எண்ணெய் விலை அபரிமிதமாக உயரும்பட்சத்தில் மட்டுமே பெட்ரோல், டீசல் விலையேற்றத்தை மத்திய அரசு பரிசீலிக்க வாய்ப்புள்ளது என்றன.

தொடா் கண்காணிப்பு: நாட்டுக்குத் தேவையான 88 சதவீத கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்து வருகிறது.

இந்தச் சூழலில் தங்கள் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருவதால் ஹோா்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதையடுத்து, இந்தியாவுக்கான கச்சா எண்ணெய், பெட்ரோலியம், திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு விநியோகம் குறித்து அமைச்சக மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் அதிகாரிகளுடன் பெட்ரோலியத் துறை அமைச்சா் ஹா்தீப் சிங் புரி ஆலோசனை நடத்தினாா்.

இதைத்தொடா்ந்து, நாடு முழுவதும் பெட்ரோலிய பொருள்கள் தடையின்றி கிடைப்பதை உறுதிசெய்ய மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளும்மேற்கொண்டு வருவதாக அந்த அமைச்சகம் எக்ஸ் தளப் பதிவில் தெரிவித்தது.

# மத்திய கிழக்கு நாடுகளில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க நடவடிக்கை; மத்திய மந்திரி தகவல்

**பெங்களூரு, மார்ச் 4:**

ஈரான் மீது இஸ்ரேல், அமெரிக்கா 28ம் தேதி அதிரடி தாக்குதல் நடத்தியது. ஈரானின் அணு சக்தி மையங்கள், அணு சக்தி உள்கட்டமைப்புகள், ராணுவ தளங்கள் என பல்வேறு பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி அவரது குடும்பத்தினர், ஈரான் பாதுகாப்புத்துறை மந்திரி அமீர், ஈரான் புரட்சிப்படை தளபதி முகமது உள்பட பலர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் மத்திய கிழக்கில் அமெரிக்க படைத்தளங்கள் அமைந்துள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்த போர் பதற்றத்தால் மத்திய கிழக்கில் உள்ள பல்வேறு நாடுகள் தங்கள் வான்பரப்பை மூடியுள்ளன. விமான சேவையும் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கு நாடுகளில் வசித்து வரும் லட்சக்கணக்கான இந்தியர்கள் நாடு திரும்ப முடியாத சூழ்நிலை நிலவி வருகிறது. இந்நிலையில், மத்திய கிழக்கில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய மந்திரி பிரஹலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கர்நாடகாவின் பெங்களூருவில் செய்தியாளர்களை சந்தித்த பிரஹலாத் ஜோஷி, உலகின் எந்த பகுதியிலாவது இந்தியர்களுக்கு சிக்கல் ஏற்பட்டால் அவர்கள் பத்திரமாக நாடு திரும்புவதை மத்திய அரசு உறுதி செய்யும். ரஷியா - உக்ரைன் போரில் உக்ரைனில் சிக்கிய இந்தியர்களை பத்திரமாக மீட்டோம். இந்தியர்களை பத்திரமாக மீட்பதுதான் எங்கள் முன்னுரிமை. மத்திய கிழக்கில் உள்ள இந்தியர்கள் பதற்றப்பட வேண்டாம். இந்தியர்கள் அனைவரையும் பத்திரமாக நாட்டிற்கு அழைத்துவர மத்திய அரசு தயாராகி வருகிறது என்றார்.

# ‘பெண்களுக்கு எதிரான வன்முறை, சமூக ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும்’ - ஜனாதிபதி திரவுபதி முர்மு

**புதுடெல்லி, மார்ச் 4:**



டெல்லி அரசு சார்பில் ‘ஆற்றல்மிகு பெண்கள், செழிப்பான டெல்லி’ (Sashakt Nari Samriddh Delhi) என்ற பெயரில் பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில், ஜனாதிபதி திரவுபதி முர்மு கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது;-

“பெண்கள் பல்வேறு துறைகளில் முன்னேறி வந்தாலும், இன்னும் வன்முறை, பொருளாதார, சமூக ஏற்றத் தாழ்வுகள், தவறான சித்தரிப்புகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பது உண்மை. இந்த தடைகளை நீக்குவதன் மூலம் மட்டுமே பெண்களுக்கு அதிகாரமளிப்பதன் இலக்கை நாம் அடைய முடியும்.

பெண்கள் சுயாதீனமான முடிவுகளை எடுக்கும் திறன், சுயமரியாதையுடன் கூடிய வாழ்க்கை மற்றும் மரியாதை, வாய்ப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறும்போது அவர்கள் உண்மையிலேயே அதிகாரம் பெறுவார்கள். குடும்ப வன்முறை, சம ஊதியம் மற்றும் சொத்துரிமை தொடர்பான பிரச்சினைகளில் இருந்து பெண்களை பாதுகாக்க பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்திய அரசு பெண்களுக்கு அதிகாரமளிப்பதைத் தாண்டி, பெண்கள் தலைமையில் வளர்ச்சியை முன்னெடுத்து செல்ல நடவடிக்கை எடுக்கிறது என்பது மிகுந்த திருப்தியை அளிக்கிறது.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து மத்திய பிரதேச மாநிலம் இந்தூர் எம்.பி. சங்கர் லால்வாணி கூறுகையில், ‘ஐக்கிய அரபு அமீரகத்தில் ஏராளமானோா் சிக்கியுள்ளது குறித்து வெளியுறவு அமைச்சகத்திடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூழல் இயல்பு நிலைக்குத் திரும்பியவுடன் அவர்கள் இந்தியாவுக்கு அழைத்து வரப்படுவா்’ என்றாா்.

# சபரிமலையில் பெண்கள்: உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து புதிதாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய தேவஸ்வம் போர்டு முடிவு

**திருவனந்தபுரம், மார்ச் 4:**

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, புதிதாக பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப் போவதாக திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு அறிவித்துள்ளது.

கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு, நாடு முழுதும் இருந்து இருமுடி கட்டி ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

சபரிமலையில், சுவாமி அய்யப்பன் நைஷ்டிக பிரம்மச்சரியத்தை கடைப்பிடித்து தவக்கோலத்தில் அமர்ந்திருப்பதால், 10 வயதுக்குட்பட்ட சிறுமியரும், 50 வயதான பெண்களும் இருமுடி சுமந்து சபரிமலைக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், 2018ல், அதற்கு அனுமதி அளித்து உத்தரவிட்டது.

அப்போது ஆட்சியில் இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசு, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை நடைமுறைப்படுத்த முயன்றது. இதனால், அய்யப்ப பக்தர்கள் மற்றும் ஹிந்து அமைப்பினர் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது.

பக்தர்களின் போராட்டத்தை மீறி, போலீசார் பாதுகாப்புடன் இரு பெண்களை சபரிமலைக்கு அழைத்து சென்றபோது, தந்திரி கண்டரரு ராஜீவரரு சன்னிதான கதவை அடைத்து, கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து, தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினர் சார்பில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில், தங்கம் மாயமான விவகாரத்தில் திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டு நிர்வாகம் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டு புதிய தலைவராக ஜெயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், உச்ச நீதிமன்றம் வழங்கிய மார்ச் 14 காலக்கெடுவுக்குள், தேவஸ்தானத்தின் நிலைப்பாடு தொடர்பாக, புதிதாக பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்படும் என தெரிவித்தார்.

இது குறித்து திருவனந்தபுரத்தில் நேற்று அவர் கூறியதாவது:

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து, புதிதாக பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய முடிவு எடுத்துள்ளோம்.

சபரிமலையில் பழைய நடைமுறையே தொடர வேண்டும். இது தான் தேவஸ்வம் போர்டின் வலுவான நிலைப்பாடு. இதில் எந்த மாற்றமும் இல்லை.

# விமானியின் இருக்கையில் தூங்கிய விமானத்தின் உரிமையாளர் - வீடியோவை பகிர்ந்த அஜித் பவாரின் மகன்

**மும்பை, மார்ச் 4:**

மராட்டிய மாநிலத்தின் மறைந்த துணை முதல்-மந்திரி அஜித் பவாரின் மகன் ஜெய பவார் விஎஸ்ஆர் வென்ச்சர் விமானத்தின் உரிமையாளர் ரோஹித் சிங் பயணத்தின்போது தலைமை விமானியின் இருக்கையில் தூங்கி கொண்டிருக்கும் வீடியோ ஒன்றை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார். மேலும் இது தொடர்பாக அவரை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக ஜெய பவார் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளதாவது:-

எங்கள் தந்தையை இழந்துள்ளோம். இந்த வலி வாழ்நாள் முழுவதும் எங்களுடன் இருக்கும். இந்த வீடியோவில், விஎஸ்ஆர் உரிமையாளர் ரோஹித் சிங், விமானத்தின் போது தலைமை விமானியின் இருக்கையில் தூங்குவதைக் காணலாம். விமானம் பறந்து கொண்டிருக்கும் இதுபோன்ற அலட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாதது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது மற்றும் அதிர்ச்சியளிக்கிறது.

இந்த விஷயத்தில் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) உடனடியாகவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். முழுமையான விசாரணை நடத்தப்படும் வரை அனைத்து விஎஸ்ஆர். விமானங்களும் உடனடியாக தரையிறக்கப்பட வேண்டும், மேலும் ரோஹித் சிங் தாமதமின்றி கைது செய்யப்பட்டு கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இது ஒரு மகனின் வேதனையான வேண்டுகோள்..என் தந்தைக்காகவும், ஒவ்வொரு பயணியின் பாதுகாப்பிற்காகவும் நான் இதைக் கேட்கிறேன் என அதில் கூறியுள்ளார்.

# காமேனி மறைவுக்கு 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கும் கர்நாடக கிராமம்!

**பெங்களூரு, மார்ச் 4:**

அயத்துல்லா அலி காமேனி கர்நாடக மாநிலம் சிக்கபள்ளாப்பூர் மாவட்டத்தில் உள்ள அலிப்பூர் என்ற கிராமத்துக்கு 2 முறை வருகை தந்துள்ளார். அந்த ஊரில் 30,000-க்கும் அதிகமான ஷியா முஸ்லிம்கள் வாழ்வதால் அவர்களுக்காக சிறப்பு தொழுகை நடத்தினார்.

அவர் வந்து சென்ற பின்னர், ஈரான் அரசின் உதவியுடன் அலிப்பூரில் காமேனி பெயரில் மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டது. இப்போதும் இயங்கி வரும் இந்த மருத்துவமனையால் அங்குள்ள மக்கள் பெரிதும் பயனடைகின்றனர்.

இதன் பிறகு அலிப்பூரை சேர்ந்தவர்களுக்கு ஈரானுடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. தற்போது 150 முதல் 200 பேர் வரை ஈரானில் பணியாற்றுகின்றனர்.

இந்நிலையில் காமேனியின் மறைவையொட்டி அலிப்பூரில் மக்கள் கருப்பு உடை அணிந்து ஊர்வலம் சென்றனர்.

இந்த ஊர்வலத்தின் போது அமெரிக்கா, இஸ்ரேல் அரசுகளுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். 3 நாட்கள் கடைகள் உள்ளிட்டவற்றை அடைத்து துக்கம் அனுசரிப்பதாகவும் வணிகர்கள் அறிவித்தனர்.

அங்குள்ள ஷியா முஸ்லிம்களின் கடைகள், வீடுகள் ஆகியவற்றில் கருப்பு கொடியும் ஏற்றப்பட்டுள்ளது.




## அவிட்டுக் காய் வெடி கலாச்சாரத்தை ஒழிக்குமா தருமபுரி காவல் துறை?



**தருமபுரி, மார்ச்.04:** ‘அவிட்டுக் காய்’ வெடி தயாரிப்பை முற்றிலும் ஒடுக்க காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், ஒகேனக்கல் உட்பட 8 வனச்சரகங்கள் உள்ளன.

இந்த வனச்சரகங்களில் முயல், மான், காட்டுப்பன்றி, நரி, காட்டெருமை, கரடி, யானை, சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகள் வசிக்கின்றன. இவற்றில் சில விலங்குகள் இன்றளவும் வேட்டைக்காரர்களின் இலக்காக உள்ளன.

வனத்துறை சார்பில் தொடர் ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொண்டபோதும் அவ்வப்போது வேட்டைக்கும்பலின் அத்துமீறல்களும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன.

குறிப்பாக இந்த கும்பல், ‘அவிட்டுக் காய்’ எனப்படும் நாட்டுவெடிகளை வேட்டைக்காக பயன்படுத்தி வருகின்றன. மிகவும் ஆபத்து நிறைந்த இந்த அவிட்டுக் காய் வெடி கலாச்சாரத்தை முழுவதுமாக ஒழிக்க காவல்துறை தலையிட வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து, வனத்துறை அலுவலர்கள் சிலர் கூறியதாவது: ‘அவிட்டுக் காய்’ வெடி என்பது, பாறைகளை வெடிக்க பயன்படுத்தும் வெடி மருந்தை பயன்படுத்தி தயாரிக்கும் ஒருவகை நாட்டுவெடி ஆகும்.

சிறுசிறு உருண்டைகளாக இந்த வெடிகளை தயாரிக்கும் வேட்டைக் கும்பல், வன விலங்குகள் நடமாடும் பகுதியில் இவற்றை ஆங்காங்கே வைத்துச் செல்கின்றனர். இந்த வெடிகள், பார்வைக்கு உணவுப்பொருள் உருண்டை போன்று தோற்றமளிக்கும்.

இதை வன விலங்குகள் வாயில் கவ்வி மெல்லும்போது வெடித்து விலங்கின் முகம் முழுவதும் சிதைந்து விலங்குகள் செயலற்று சுருண்டு விழும். அருகில் மறைந்திருக்கும் வேட்டை கும்பல் உடனே விலங்கின் உடலை இறைச்சித் தேவைக்காக எடுத்துச் செல்வர்.

வனப்பகுதியிலும், வனத்தையொட்டிய விளைநிலங்களிலும் இவ்வாறு அவிட்டுக் காய் வெடிகளை வைக்கும் வேட்டை கும்பல் சில நேரங்களில் அவற்றை அப்படியே விட்டுச் செல்வதும் உண்டு.

இவ்வாறு விடப்படும் அவிட்டுக் காய்களை, மேய்ச்சலுக்கு செல்லும் ஆடு, மாடுகள் எடுத்து மென்று முகம் சிதறி உயிரிழந்த சம்பவங்களும் உண்டும். அலட்சியமாக விடப்படும் இவ்வகை வெடிகளில் குழந்தைகள் உட்பட மனிதர்களும் சிக்கி உயிரிழக்கவும் வாய்ப்புண்டு.

கடந்த டிசம்பர் மாதம் பாலக்கோடு வனச்சரகத்தில் எலுமிச்சனஅள்ளி அருகே வனப்பகுதியில் விலங்கு வேட்டைக்காக அவிட்டுக் காய் வெடிகளை வைத்த 2 வேட்டை நபர்கள் கைது செய்யப்பட்டனர்.


அதேபோல, இரு வாரங்களுக்கு முன்பு பென்னாகரத்தை அடுத்த ஏரியூர் பகுதியில் செல்லமுடி தளவாய் காடு என்ற இடத்தில் மேய்ச்சலுக்கு சென்ற பசுமாடு, காட்டுப்பன்றி வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த அவிட்டுக்காய் வெடியை கடித்து முகம் சிதறியது.

இந்த அவிட்டுக் காய் வெடி விவகாரத்தில், வன எல்லைக்குள் நடமாடும் வேட்டை கும்பல் மீது மட்டும் தான் வனத் துறை யால் நடவடிக்கை எடுக்க முடியும்.

வனத்தை யொட்டிய அரசு புறம்போக்கு நிலங்களிலும், பட்டா நிலங்களிலும் இவ்வகை வெடிகளை வேட்டைக்கு பயன்படுத்துவோர் மீது வனத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ள முடிவதில்லை. இதுபோன்ற சூழல்களிலும் அவிட்டுக் காய் வெடி கும்பல் மீது காவல் துறையால் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

மேலும், அவிட்டுக் காய் வெடிக்கான மூலப்பொருளான வெடிமருந்துகள் நடமாட்டத்தை தடுப்பதன் மூலமும் இவ்வகை வெடிகள் தயாரிப்பை முழுமையாக தடுக்க முடியும். எனவே, பல வகைகளிலும் ஆபத்து நிறைந்த அவிட்டுக் காய் வெடி கலாச்சாரத்தை ஒழிக்க, காவல்துறை மூலம் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கூறினர்.

## சென்னை | தகராறு குறித்து விசாரிக்கச் சென்ற உதவி ஆய்வாளர், காவலரை தாக்கிய இருவர் கைது



**சென்னை, மார்ச்.04:** போலீஸார் மீது தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். சென்னை, கொருக்குப் பேட்டை, எம்எஸ் நாயுடு தெருவில் டாஸ்மாக் மதுபானக் கடை உள்ளது. அதனருகே சிலர் தகராறில் ஈடுபடுவதாக போலீஸாருக்கு நேற்று முன்தினம் புகார் சென்றது.

இதையடுத்து, கொருக்குப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் தனசேகரன், காவலர் ராஜ்குமார் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அப்போது, அங்கு தகராறு செய்து கொண்டிருந்த 3 இளைஞர்களை கண்டித்து, அங்கிருந்து செல்லுமாறு போலீஸார் எச்சரித்தனர்.

இதில், போலீஸாருக்கும், அவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. உடனே அந்த நபர்கள் உதவி ஆய்வாளர் தனசேகரனையும், காவலர் ராஜ்குமாரையும் தாக்கினர்.

இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த பொதுமக்கள், காயமடைந்த போலீஸாரை மீட்டு ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதே வேளையில், தாக்குதல் சம்பவம் குறித்து தகவலறிந்து அங்கு வந்த கொருக்குப்பேட்டை போலீஸார், அங்கிருந்த 3 பேரில், இருவரை பிடித்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர்.

இதில், பிடிபட்டவர்கள் பழைய வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த மணிகண்டன் (26), அதேப் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் (40) என்பது தெரிய வந்தது. இதையடுத்து, இருவரையும் போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கிளாம்பாக்கத்தில் விரைவில் பயன்பாட்டுக்கு வருகிறது ரயில், பேருந்து நிலையத்தை இணைக்கும் ஆகாய நடைபாதை!



**கிளாம்பாக்கம்கி, மார்ச்.04:** ளாம்பாக்கம் ரயில் நிலையம் பேருந்து நிலையத்தை இணைக்கும் ஆகாய நடைபாதை ரூ.79 கோடியில் கட்டப்பட்டு வரும் நிலையில், வரும் மார்ச் மாத இறுதியில் பயன்பாட்டுக்கு வரும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கிளாம்பாக்கம் ரயில் நிலையம் முதல் கிளாம் பாக்கம் பேருந்து நிலையம் வரையும் ஜி,எஸ்,டி சாலையை கடக்கவும் ஆகாய நடைபாதை ரூ.79 கோடியில் கட்டப்பட்டு வருகிறது. 279 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமுடன் அமைக்கப்படுகிறது.

இந்த ஆகாய நடைபாதை பணிகளுக்கான ஆலோசகராக ஐஐடி மதராஸ் சார்ந்த நகர்ப்புறமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CUBE) நியமிக்கப்பட்டு அவர்கள் தெரிவித்த ஆலோசனைப்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் எளிதாக பயன்படுத்தவும் பயணிகள் வசதிக்காகவும் சாலையை கடக்க இரு முனைகளிலும் 6 நகரும் படிக்கட்டுகள், 4 லிப்ட்கள் மற்றும் வழுக்காத தரைத்தளம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மாநகர பேருந்து நிறுத்தம் அருகே உள்ள நடைபாதையின் தளம், இருக்க வேண்டிய மட்டத்தைவிட சற்று அதிகமாக கீழ்நோக்கி இருப்பதால் பயணிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளதாக புகார் எழுந்தது.


இதனால் ஆகாய நடைபாதை பணியை பரிசோதித்த ஐஐடி மெட்ராஸ் ‘கியூப்’ (CUBE) அமைப்பு ஆய்வு செய்து சில மாற்றங்களை தெரிவித்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் இதனை முற்றிலும் சி.எம்.டி. ஏ அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

ஐஐடி மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் ‘கியூப்’ (CUBE) அமைப்பு தெரிவித்த ஆலோசனையின் படியே பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சி.எம்.டி.ஏ அதிகாரி ஒருவர் கூறியது: பயணிகள் வசதிக்காக 79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரம்மாண்ட ஆகாய நடைபாதை கட்டப்பட்டு வருகிறது.

இந்த நடைபாதை பணிகள் ஓரளவு நிறை வடைந்திருக்கும் நிலையில் சில தொழில்நுட்பச் சிக்கல்கள் ஏற்பட்டதாக கூறப்படுவது உண்மையில்லை. நடைபாதை பணி ஐஐடி மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் ‘கியூப்’ (CUBE) அமைப்பு தெரிவித்த அறிக்கையின்படியே நடைபெற்று வருகிறது. வரும் மார்ச் மாத இறுதியில் பயன்பாட்டுக்கு வரும் என்றார்.

## இறைச்சி கடைகளில் ஆடு வெட்ட தடை கோரி மனு: உயர் நீதிமன்ற அமர்வு தள்ளுபடி



**சென்னை, மார்ச்.04:** மிருக வதை தடுப்பு சட்ட விதிகளை மீறி இறைச்சிக் கடைகளில் ஆடு, மாடுகளை வெட்ட தடை விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இது தொடர்பாக விலங்குகள் நல ஆர்வலரான முரளிதரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு: மிருக வதை தடுப்புச் சட்டத்தில் ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களை வெட்ட தனி இடங்களை ஒதுக்க வேண்டும், அங்கீகரிக்கப்பட்ட, உரிமம் பெற்ற இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அவற்றை வெட்டக் கூடாது என வரையறுக்கப்பட்டுள்ளது.

அதேபோல உயிருடன் உள்ள பிற விலங்குகளின் கண் முன்பாக அவற்றை வெட்டக் கூடாது. வெட்டப்படும் கால்நடைகளின் ரத்தத்தை முறையாக சேகரிக்க வேண்டும். ஆடுகளை வெட்ட அமைக்கப்பட்டுள்ள ஆட்டுத்தொட்டிகளில் கால்நடை மருத்துவரால் சான்றளிக்கப்படும் விலங்குகளை மட்டுமே வெட்ட வேண்டும் என சட்ட விதிகள் உள்ளன.

ஆனால் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் இந்த விதிகள் மீறப்படுகின்றன. இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடு, மாடு, கோழிகளின் ரத்தம் நேரடியாக கால்வாய்களில் விடப்படுகிறது. இறைச்சிக் கழிவுகள் வெட்ட வெளியில் குப்பைத் தொட்டிகளில் போடப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

எனவே, சென்னையில் உள்ள இறைச்சிக் கூடங்களில் மிருக வதை தடுப்புச் சட்ட விதிகளையும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தர சட்ட விதிகளையும் கண்டிப்பான முறையில் பின்பற்ற சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட வேண்டும். அதுவரை ஆடு, மாடுகளை வெட்ட தடை விதிக்க வேண்டும் என மனுவில் கோரியிருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் தலைமையிலான அமர்வில் நடந்தது. அப்போது, எந்தெந்த இறைச்சிக் கடைகளில் இதுபோல விதிமீறல்கள் நடைபெறுகின்றன என்பதை குறிப்பிட்டு வழக்கைத் தொடராமல், பொத்தாம்பொதுவாக குற்றம்சாட்டி இந்த வழக்கை மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாகக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் மின்சார ரயில் சேவை பாதிப்பு தொடர்கிறது: 11-வது நாளாக பயணிகள் கடும் அவதி



**சென்னை, மார்ச்.04:** கடற்கரை - செங்கல்பட்டு வழித்தடத்தில் நேற்றும் மின்சார ரயில் சேவை பாதிப்பு ஏற்பட்டது. பயணிகள் 11-வது நாளாக கடும் அவதிப்பட்டனர். புதிய கால அட்டவணைப்படி, மின்சார ரயில் சேவை இயக்க பயணிகள் வலியுறுத்தினர்.

எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணியால், 10, 11 ஆகிய நடைமேடைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் கடற்கரை - செங்கல்பட்டு தடத்தில் பிப்.20-ம் தேதிமுதல் ஏப்.5-ம் தேதிவரை 89 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதர மின்சார ரயில் சேவைகள் மாற்றப்பட்டுள்ளன.

கடற்கரை - செங்கல்பட்டு இடையே இயக்கப்படும் மின்சார ரயில்கள் எழும்பூர் ரயில் நிலைய 5, 6-வது நடைமேடைகள் வழியாக இயக்கப்படுகின்றன. இவ்வாறு நடைமேடைகள் மாற்றப்பட்டதால், இருமார்க்கங்களிலும் மின்சார ரயில்கள் தாமதமாகின்றன.

ரயில் நிலையங்களிலும், ரயில்களிலும் பயணிகள் 30 நிமிடங்கள் முதல் 45 நிமிடங்கள் வரை காத்திருக்கின்றனர். கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக, பயணிகள் சிரமத்தைச் சந்திக்கின்றனர்.

அலுவலகத்துக்கு தாமதம் பயணிகள் வசதிக்காக, இலவச சிறப்புப் பேருந்து சேவைகளும், விரைவு ரயில் சேவைகளும் இயக்கப்படுகின்றன. ஆனாலும், கடற்கரை - தாம்பரம் தடத்தில் ரயில் பயணிகள் நேற்று 11-வது நாளாக கடும் அவதியடைந்தனர்.

செங்கல்பட்டு, தாம்பரத்திலிருந்து எழும்பூர், பூங்கா நிலையத்துக்கு மின்சார ரயிலில் வர ஒன்றரை மணி நேரமானதாக பயணிகள் வேதனை தெரிவித்தனர்.

கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம் நிலையங்களில் தலா 20 நிமிடங்கள் முதல் 30 நிமிடங்கள் வரை நிறுத்தப்பட்டன. இதன் பிறகு, மெதுவாக ரயில்கள் சென்றன. அலுவலகத்துக்கு சரியான நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு வருவதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து, ரயில் பயணிகள் கூறுகையில், “அட்டவணையில் அறிவித்த ரயில் களை முறையாக இயக்குவது இல்லை. அட்டவணையில் அறிவித்த பல ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ரயில் நிலையங்களில் அறிவிப்பும் முறையாக இல்லை. எனவே பயணிகள் சிரமத்தைக் குறைக்க, தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றனர்.

## காய்ச்சல், சளி ஜீரண மண்டல பாதிப்புக்கான 218 மருந்துகள் போலியானவை: ஆய்வில் உறுதி



**சென்னை, மார்ச்.04:** காய்ச்சல், சளி, ஜீரண மண்டல பாதிப்பு, கிருமித் தொற்று உள்ளிட்ட பிரச்சினைகளுக்கான 215 மருந்துகள் தரமற்றவையாகவும், 3 மருந்துகள் போலியானவையாகவும் இருந்தது மத்திய மருந்து தரக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் அனைத்து மாத்திரை, மருந்துகளும் மத்திய - மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

அந்த ஆய்வின்போது தரமற்ற மற்றும் போலி மருந்துகள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதில், காய்ச்சல், சளி, கிருமித் தொற்று, ஜீரண மண்டல பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு பயன்படுத்தப்படும் 215 மருந்துகள் தரமற்றவையாகவும், 3 மருந்துகள் போலியானவையாகவும் இருந்தது கண்டறியப்பட்டது.

அந்த மருந்துகளின் விவரங்களை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் https://cdsco.gov.in/ என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸும் அனுப்பப்பட்டுள்ளது.

## டீக்கடையில் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு அரிவாள் வெட்டு.. இருவர் படுகொலை

**திருநெல்வேலி, மார்ச்.04:** திருநெல்வேலியில் டீக்கடையில் 2 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நாங்குநேரி அருகே களக்காடு செல்லும் சாலையில் பெரும்பத்து என்ற கிராமத்தில் உள்ள ஒரு டீக்கடை முன்பு சிலர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அப்போது 3 இரு சக்கர வானங்களில் வந்த 9 பேர் கொண்ட கும்பல் தாங்கள் எடுத்து வந்த அரிவாள் மற்றும் பிற ஆயுதங்களால் திடீரென தாக்குதல் நடத்தினர்.


அங்கிருத்தவர்களை சரமாரியாக வெட்டிய அவர்கள் பெட்ரோல் குண்டுகளை வீசிவிட்டு அங்கிருந்து தப்பித்தனர்.

இந்த சம்பவத்தில் 9 பேருக்கு வெட்டு விழுந்தது. 2 பேர் இறந்த நிலையில், 2 பேர் அரசு மருத்துவமனையிலும், மற்றவர்கள் லேசான காயத்துடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் ஏர்வாடி - நாங்குநேரி மெயின் ரோட்டில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட எஸ்.பி பிரசன்னா குமார் மற்றும் நெல்லை சரக டிஐஜி சரவணன் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். சம்பவ இடத்தில் ஏராளமான போலீஸ் குவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டூர்புரம் அருகே கார்கள் மோதி விபத்து - சட்டக்கல்லூரி மாணவி உயிரிழப்பு



**சென்னை, மார்ச்.04:** சென்னை கோட்டூர்புரம் காந்தி மண்டபம் சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் சட்டக்கல்லூரி மாணவி உயிரிழந்தார்.

கோட்டூர்புரம் சாலையில் முன்னால் சென்ற கார் திடீரென திரும்பியதால் இரு கார்களும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் கேரளாவை சேர்ந்த சட்டக்கல்லூரி மாணவி ஜானு (21) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

விபத்தில் கார் ஓட்டுநர் உட்பட காயம் அடைந்த 4 பேர் சிகிச்சைக்காகராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மாணவியிடம் சில்மிஷத்தில் ஈடுபட்ட காவலாளிக்கு அடி - உதை

### தோழிகள் ஒன்று சேர்ந்து தாக்கினார்கள்

**சென்னை, மார்ச்.04:** மேற்கு வங்கத்தை சேர்ந்த மாணவி சென்னை தரமணியில் உள்ள தனியார் கல்லூரியில் இதழியல் படித்து வருகிறார். தரமணி கானகத்தில் உள்ள விடுதியில் தங்கியுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் இரவு தனது தோழிகள் இருவருடன் அதே பகுதியில் உள்ள ஒரு ஓட்டலுக்கு சென்று சாப்பிட்டுவிட்டு மீண்டும் விடுதிக்கு நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது மது போதையில் இருந்த ஒரு நபர் மாணவியின் உடலில் கை வைத்து சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார். இதையடுத்து 3 பேரும் சேர்ந்து போதை நபரை பிடித்து சரமாரியாக அடித்து உதைத்தனர். பின்னர் கோட்டூர்புரம் போலீசில் ஒப்படைத்தனர்.

போலீஸ் விசாரணையில் அவரது பெயர் காசி என்பது தெரியவந்தது 58 வயதான அவர் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நெசல் கிராமத்தை சேர்ந்தவர் என்பதும், சென்னையில் தங்கி இருந்து 40 ஆண்டுகளாக கொத்தனார் வேலை செய்து வருவதும் தெரிய வந்தது.

அவர் மீது பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு சட்டம் உள்ளிட்ட 2 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார் காசியை கைது செய்தனர்.

பின்னர் அவரை சைதாப்பேட்டைகோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## உறுப்பினர்கள் நலத்திட்டங்களை பெற இணையம் மூலம் விண்ணப்பிக்கலாம்: மீனவர் நலவாரியம் தகவல்



**சென்னை, மார்ச்.04:** தமிழக மீனவர் நல வாரியம், இறப்பு நிவாரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை, விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்புக்கான நிவாரணம், மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவருக்கான நிவாரணம், உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை உட்பட பல்வேறு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களை எளிதாக அணுகலாம்.

தமிழக மீனவர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், பல அலுவலகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டிய அவசியமின்றி, முழுமையாக இணையதளம் வாயிலாக அனைத்து நலத் திட்டங்களுக்கும் எளிமையாக விண்ணப்பிக்கலாம்.

ஆதார் அடிப்படையிலான இ-கேஒய்சி மூலம் தனி நபர் அடையாளம் சரிபார்க்கப்பட்டு குறைந்த ஆவணங்களுடன் அனைத்து நலத்திட்டங்களுக்கும் விண்ணப்பிக்கலாம். ஏதேனும், அவசியம் இருப்பின் விண்ணப்பதாரர் துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கலாம்.

அவை, தமிழக மீனவர் நல வாரியத்தால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். மேலும், பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிப்புகள் அனுப்பப்பட்டு விண்ணப்பத்தின் வெளிப்படைத் தன்மை மேலும் வலுப்படுத்தப்படும்.

ஒவ்வொரு நலத்திட்ட உதவிகளுக்கும் எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது குறித்தான வழிகாட்டுதல்களுடன் கூடிய விரிவான பயனர் கையேடு இணையதளத்தில் கிடைக்கச் செய்யப்படும்.

மேலும் மேம்படுத்தப்பட்ட இணையதள விண்ணப்பம் உருவாக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும். தமிழக மீனவர் நல வாரிய உறுப்பினர் செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை தொடங்கியது - புதிய கல்வி ஆண்டில் 5 லட்சம் பேர் சேர்க்க இலக்கு



**சென்னை, மார்ச்.04:** அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1-ந்தேதி மாணவர் சேர்க்கை தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2026-27 ம் புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நேற்று தொடங்கியது. சைதாப்பேட்டையில் உள்ள சி.எஸ்.ஐ. நடுநிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் 35 ஆயிரம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை மாணவ-மாணவிகளை சேர்ப்பதற்கான பணிகள் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு 4 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டனர். இந்த ஆண்டு 5 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கல்வி அதிகாரிகள் அரசு பள்ளிகளில் மாணவர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கையில் தீவிரம் காட்ட வேண்டும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

சென்னையை பொருத்தவரையில் மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் 300-க்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளன. அரசு பள்ளிகள் மிகக் குறைந்த அளவிலே செயல்படுகிறது. மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்தி அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

## ரூ.23 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட இந்தோ-சாராசனிக் கட்டிடம்: உயர் நீதிமன்ற கூடுதல் வளாகமாக செயல்பட தொடங்கியது



**சென்னை, மார்ச்.04:** சுமார் 135 ஆண்டுகால பாரம்பரியமிக்க பழைய இந்தோ-சாராசனிக் சட்டக்கல்லூரி வளாகம் ரூ. 23 கோடி செலவில் புனரமைக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் கூடுதல் வளாகமாக நேற்றுமுதல் செயல்படத் தொடங்கியது.

சென்னை பாரிமுனை பகுதியில் இயங்கி வரும் உயர் நீதிமன்ற வளாகத்தில் 'மெட்ராஸ் லா காலேஜ்' என 1891-ம் ஆண்டு தொடங்கப்பட்ட சட்டக் கல்லூரி, பின்னாளில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியாக பெயர் மாற்றப்பட்டது.

இந்த சட்டக்கல்லூரி நிர்வாக காரணங்களுக்காக சில ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாக பிரிக்கப்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம் புதுப்பாக்கத்துக்கும், திருவள்ளூர் மாவட்டம் பட்டரை பெரும்புதூருக்கும் இடமாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில், சட்டக்கல்லூரி இயங்கி வந்த சுமார் 135 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியமிக்க இந்தோ - சாராசனிக் கட்டிடம், ரூ.23 கோடி செலவில் பழமை மாறாமல் புனரமைக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்றத்தின் கூடுதல் வளாகமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த வளாகம், தற்போதைய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையில் கடந்த ஆண்டு அக்டோபரில் திறக்கப்பட்டது. எழில்மிகு தோற்றத்துடன் விசாலாமான நீதிமன்ற அறைகளுடன் அமைந்துள்ள இந்த கூடுதல் வளாகத்தில் நேற்று முதல் 6 நீதிமன்றங்கள் தனது அன்றாட நீதிபரிபாலன பணிகளை தொடங்கியுள்ளன.

இந்த நீதிமன்றங்களுக்கு பழைய வழக்கப்படி 'ரோமன் நம்பர்களில்' எண்கள் பெயரிடப்பட்டுள்ளன. புதிய வளாகத்தில் முதல் நாளான நேற்று தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் தலைமையிலான அமர்வு முதல் நீதிமன்றத்திலும், நீதிபதி ஜி.கே.இளந்திரையன் இரண்டாவது நீதிமன்றத்திலும், நீதிபதி கிருஷ்ணன் ராமசாமி மூன்றாவது நீதிமன்றத்திலும், நீதிபதி டி.வினோத்குமார் நான்காவது நீதிமன்றத்திலும், நீதிபதி கே.குமரேஷ் பாபு ஐந்தாவது நீதிமன்றத்திலும், நீதிபதி ஆர்.சக்தி வேல் ஆறாவது நீதிமன்றத்திலும் அமர்ந்து உரிமையியல், குற்றவியல் மற்றும் ரிட் வழக்குகளின் இறுதி விசாரணைகளை மேற்கொண்டனர்.

இங்கு செயல்பட்ட பழைய மெட்ராஸ் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்ற இந்நாள் மூத்த வழக்கறிஞர்கள் பலர், சீரமைக்கப்பட்ட வளாகத்தை பார்வையிட்டு, பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். பல வழக்கறிஞர்கள் செல்பி எடுத்தும், குழு புகைப்படம் எடுத்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## அரளிப்பாறை மஞ்சுவிரட்டில் மாடு முட்டி 3 பேர் உயிரிழப்பு



**சிங்கம்புணரி, மார்ச்.04:** சிவகங்கை மாவட்டம் சிங்கம் புணரி அருகே அரளிப்பாறை மஞ்சுவிரட்டில் மாடுகள் முட்டியதில் வடமாநில ஐஸ் வியாபாரி உள்பட 3 பேர் உயிரிழந்தனர். 95 பேர் காயமடைந்தனர்.

சிங்கம்புணரி அருகே அரளிப்பாறையில் சிறிய குன்றின் மீது குன்றக்குடி ஆதீன மடத்துக்குட்பட்ட பாலதண்டாயுதபாணி சுவாமி கோயில் உள்ளது. 5 நிலை நாட்டார்களுக்கு பாத்தியப்பட்ட இந்தக் கோயிலில், ஆண்டுதோறும் மாசிமகத் திருவிழாவின் 10-ம் நாளில் மஞ்சுவிரட்டு விமரிசையாக நடைபெறும்.

இதை முல்லைமங்கலம், சதுர்வேதமங்கலம், கண்ணமங்கலம், சீர்சேர்ந்த மங்கலம், வேழமங்கலம் ஆகிய 5 நிலை நாட்டார்கள் சேர்ந்து 200 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வருகின்றனர்.

அதன்படி, நேற்று கோயிலில் சிறப்பு வழிபாடு முடிந்து மஞ்சு விரட்டு திடலுக்கு நாட்டார்கள் ஊர்வலமாக வந்தனர். பின்னர் கோயில் காளைகளுக்கு மரியாதை செலுத்தியதும் மற்ற காளைகளுக்கு வேட்டி, துண்டுகள் அணிவித்தனர்.

தொடர்ந்து சிவகங்கை, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, மதுரை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 128 காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன. 70-க்கும்மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர்.

அவர்கள் சீறிப்பாய்ந்த காளைகளை அடக்க முயன்றனர். இதை ஆயிரக்கணக்கானோர் ரசித்தனர். முன்னதாக ஆங்காங்கே வயல்வெளிகளில் கட்டுமாடுகளாக 500-க்கும் மேற்பட்ட காளைகள் அவிழ்க்கப்பட்டன.

மாடுகள் முட்டியதில் புதுக்கோட்டை மாவட்டம் அரப்பன்வயலைச் சேர்ந்த சுந்தர்ராஜன் (34), மதுரை மாவட்டம், மேலூர் அருகே நாட்டார் மங்கலத்தைச் சேர்ந்த ராமநாதன் (23), ஐஸ் வியாபாரியான ராஜஸ்தானைச் சேர்ந்த ஜமால்லால் ஜி (55) ஆகிய மூவர் உயிரிழந்தனர். 95 பேர் காயமடைந்தனர்.

படுகாயமடைந்த 18 பேர் மேல்சிகிச்சைக்காக சிவகங்கை, சிங்கம்புணரி அரசு மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிங்கம்புணரி வட்டாட்சியர் நாகநாதன் தலைமையிலான அதிகாரிகள் ஏற்பாடுகளை கண்காணித்தனர்.

200-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

## சின்னம்மை பரவும் காலம் என்பதால் முன்னெச்சரிக்கையுடன் இருக்க சுகாதாரத் துறை அறிவுறுத்தல்



**சென்னை, மார்ச்.04:** 'தமிழகத்தில் ஏப்ரல் மாதம் வரை சின்னம்மை பரவும் காலம் என்பதால் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்' என்று தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் சோமசுந்தரம் அறிவுறுத்தியுள்ளார்.

கேரள மாநிலத்தில் சின்னம்மை நோய் பாதிப்பு அதிகரித்துள்ளது. குளிர்காலத்தில் இருந்து வெப்பமான பருவம் மாறும்போது, சின்னம்மை பரவல் அதிகரிக்கிறது. தமிழகத்திலும் சின்னம்மை பரவும் காலம் பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை இருப்பதால், பொதுமக்களுக்கான வழிகாட்டுதல்களை தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநர் சோமசுந்தரம் வெளியிட்டுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: சின்னம்மை என்பது எளிதில் பரவும் வைரஸ் தொற்று நோயாகும். பாதிக்கப்பட்டவர் இருமும்போது அல்லது தும்மும்போது வெளிவரும் காற்று துளிகள் மூலமும், கொப்பளங்களில் இருந்து வரும் திரவத்தை தொடுவதால் அல்லது அவர்கள் பயன்படுத்திய உடைகள், பாத்திரங்கள் போன்றவற்றை பயன்படுத்துவதாலும் சின்னம்மை பரவுகிறது.


இந்த நோய் பொதுவாக லேசான காய்ச்சல், சோர்வு, தளர்ச்சி, பசியின்மை ஆகிய அறிகுறிகளுடன் தொடங்கி, பிறகு உடலில் சிறிய நீர் திவளைகள் போன்ற கொப்புளங்கள் தோன்றி. உடலெங்கும் பரவும். ஓரிரு நாட்களில் வெடித்து, பின்னர் உடைந்து காய்ந்து விடும். சின்னம்மையானதுகுழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு சிறிய பாதிப்பை ஏற்படுத்தும். கர்ப்பிணிகள், பச்சிளம் குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு கூடுதல் பாதிப்பு ஏற்படலாம். நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தனிமைப்படுத்துதல் மற்றும் சரியான பராமரிப்பு மேற்கொண்டால் எளிதில் குணமாகிவிடும்.

கைகளை அடிக்கடி கழுவவேண்டும். இருமல் அல்லது தும்மலின் போது வாய், மூக்கை மூடிக்கொள்ள வேண்டும். நீர்ச்சத்து மிகுந்த ஆகாரங்கள், சத்தான உணவுகளை உண்ணவேண்டும். பாதிக்கப்பட்டவர் களை, அவர்களின் அனைத்து கொப்புளங்களும் காய்ந்து விழும் வரை (7-10 நாட்கள்) வீட்டில் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும். நோய் பாதிப்பு உள்ள குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம். முழுமையாக குணமடைந்த பிறகே அனுப்ப வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் உடைகள், படுக்கை விரிப்புகளை, கிருமிநாசினி கொண்டு அல்லது சுடு தண்ணீரில் சுத்தம் செய்ய வேண்டும். நோய் அறிகுறிகள் யாரிடமாவது இருந்தால், அவர்கள் உடனடியாக அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம். அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டும். சின்னம்மை குறித்த மேலும் தகவல்களுக்கு 104 என்ற 24 மணிநேர தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




## தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியில்தான் குழப்பம்: எடப்பாடி பழனிசாமி



**சென்னை, மார்ச்.04:** தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கு அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி தீவிரமாக தயாராகி வருகிறது. இது தொடர்பாகவும் தொகுதி பங்கீடு குறித்தும் பேச்சு நடத்துவதற்காக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று காலையில் டெல்லி புறப்பட்டு சென்றார்.

மத்திய மந்திரி அமித்ஷாவை சந்தித்து பேசிய எடப்பாடி பழனிசாமி எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பது பற்றி விவாதித்தார்.

இன்று காலையில் டெல்லி விமான நிலையத்தில் எடப்பாடி பழனிசாமி அளித்த பேட்டி வருமாறு:-

மத்திய மந்திரி அமித்ஷாவை அவரது இல்லத்தில் சந்தித்து தமிழக தேர்தல் நிலவரம் பற்றி கலந்து பேசினோம். தேர்தலில் நாம் எவ்வாறு இணைந்து செயல்பட வேண்டும் என்பதை பற்றி கலந்து ஆலோசித்தோம்.

கேள்வி: கூட்டணிப் பேச்சுவார்த்தை முடிந்துவிட்டதா? புதிய கட்சிகள் ஏதாவது அ.தி.மு.க. கூட்டணிக்கு வர இருக்கிறதா?

பதில்: சில கட்சிகளுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம். வருவதற்கு வாய்ப்பு உண்டு.

கேள்வி: சசிகலா ஏற்கெனவே அ.தி.மு.க.வில் இருந்தவர். அவருடைய கட்சி தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வருவதற்கு வாய்ப்பு உள்ளதா? நேற்று நடந்த கூட்டத்தில் இதைப்பற்றி பேசியதாக சொல்லப்படுகிறதே?

பதில்: அதைப்பற்றி பேசவில்லை. இதை விடுங்கள். நீங்களாக காது, மூக்கு வைத்து பேச வேண்டாம்.

கேள்வி : தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கி விட்டதா?

பதில்: விரைவாக ஆரம்பிக்கப்படும். தேர்தல் இன்னும் அறிவிக்கவில்லையே.

கேள்வி: தேர்தல் தேதி அறிவித்த பிறகுதான் தொகுதிப் பங்கீடு நடைபெறும் என்று நயினார் நாகேந்திரன் கூறியிருக்கிறாரே?

பதில்: தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. எங்கள் கூட்டணி சுமுகமாக இருக்கிறது. எதைப் பற்றியும் கவலைப்படவில்லை. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு குழப்பம் இருப்பதை பத்திரிகை, ஊடகங்களிலும் வரும் செய்தியை வைத்து கணிக்க முடிகிறது.

அந்த கூட்டணியில்தான் பிரச்சனை இருக்கிறதே ஒழிய, அ.தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒன்றாக இருந்து மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வருகின்ற தேர்தலில் அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெற்று அ.தி.மு.க. ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## முதலமைச்சர் தூக்கத்தில் இருந்து எழுவாரா? - நாங்குநேரி கொலை சம்பவத்திற்கு விஜய் கண்டனம்





**திருநெல்வேலி, மார்ச்.04:** திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் வடமாநிலத் தொழிலாளி உள்பட 2 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி அருகே பெரும்பத்து கிராமத்தில் நேற்றிரவு இருசக்கர வாகனங்களில் சென்ற 9 பேர் கொண்ட கும்பல், சாலையில் சென்றவர்கள், டீக்கடை அருகே நின்றவர்கள் மீது ஆயுதங்களால் சரமாரியாகத் தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர். 5 பேர் வெட்டுக் காயம் அடைந்தனர் என்று வெளியான செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. இந்தக் கொலைவெறித் தாக்குதல், கடும் கண்டனத்திற்கு உரியது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, படுகாயம் அடைந்தவர்கள் விரைந்து குணமடைய விழைகிறேன்.

உலக நாடுகளுடன் போட்டி போடும் ஓர் ஆட்சியில் பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் எங்கே?

இந்தியாவின் டாப் மாநிலத்தில் காவல் துறைக்குச் சட்டம் ஒழுங்கு டிஜிபி எங்கே?

நம்பர்1 மாநிலம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் ஆட்சியின் சட்டம் ஒழுங்கு லட்சணம் இதுதானா?

போதைக் கும்பல் சுதந்திரமாக வன்முறை நிகழ்த்த இடம் தந்த பொறுப்புமிக்க ஆட்சி இதுதானா?

பொதுமக்கள் ஒவ்வொரு நாளும் புலம்பித் தவித்துக் கோபத்தில் கொந்தளித்துக் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஆட்சியே முடியப் போகிறது. இப்போதாவது காவல் துறையைக் கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் தூக்கத்தில் இருந்து எழுவாரா?

மக்கள் நலன்களை, அவர்தம் பாதுகாப்பைத் துளியும் யோசிக்காத இந்தத் தி.மு.க. ஆட்சி, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் தூக்கி எறியப்படுவது உறுதி உறுதி உறுதி.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com